
www.tamilarangam.net



# பாலம்

ஜனவரி
1987
விலை. ரூ.
1.50

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

ஈழப் புரட்சி அமைப்பின்

பதினோராம் ஆண்டு

நிறைவு :

# வரலாறு மேலும் மேலும் வெற்றியைக் குவித்துச் செல்கிறது.




1975 ஜனவரி 3 ''ஈழப் புரட்சி அமைப்பு'' நாள், இலங்கையில் வாழ்கின்ற நாற்பது லட்சம் தமிழ் பேசும் மக்களது விடிவிற்கான அமைப்பு வடிவம் பெற்ற நாள். பதினோரு ஆண்டுகால அனுபவத்தை பூர்த்தி செய்யும் ஈரோஸ் தனது பார்வையை அகலப்படுத்தி, ஆழப்படுத்திச் செல்லவே எண்ணுகிறது.

ஆளப்படுகிறவர்கள் பக்கமே வரலாறு மேலும் மேலும் வெற்றியைக் குவித்துச் செல்கிறது. உலகெங்கும் விடுதலை முழக்கம் ஓங்கிக் குரலெழுப்புகிறது. தமிழ் பேசும் சமூகத்தின் மீதான இனவெறி ஒடுக்கு முறையின் நாற்பதாண்டுகால கொடுங்கோன்மைக்கு முடிவு நாள் குறிக்கப்பட்டு விட்டது.

விடுதலை. இது காலத்தின் தேவை ; ஆனால் எதற்கு விடுதலை, எதிலிருந்து விடுதலை-யாருக்கு விடுதலை' இவை கேட்கப்படவேண்டியவைகளும், விடைகாணப்பட வேண்டியவைகளுமாகும். இதன் அடிப்படையிலேயே தமிழர், முஸ்லீம் என்ற இனப்பிரிவினரும், இந்து, கிறித்தவ, இஸ்லாம் என்ற மதப் பிரிவினரும் சாதி, மத, பிரதேச, அந்தஸ்து பாகுபாடுகளுக்கப்பால் நாம் ஈழவர், நமது மொழி தமிழ், நம்நாடு ஈழம் என்ற கோட்பாட்டுக்கமைய ஒன்றுபடுத்தப்படுகின்றனர். இது ஈழப்புரட்சி அமைப்பின் நெறியமைப்பு.

ஒடுக்குமுறை என்பது என்ன? சமூக மாற்றத்தில் பிரதானமாய் கவனிக்கப் பட வேண்டிய விஷயம். ஈழத்தில், சிங்கள பௌத்த இனவாதத்தால் தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுகின்றனர். பெரும் தேசிய வாதத்தின் வடிவம் இது. பெருந் தேசிய வாதம் என்பது, அந்நாட்டில் ஏகாதிபத்தியத்தின் ஆளுமையை நிலைநிறுத்தப் பயன்படும் ஓர் கருவி. இத்திரை விலகும் போது அங்கு ஒடுக்கு முறை அகன்றிடுமா ? இல்லை ! மனிதனை மனிதன் சுரண்டுகிற பொருளாதார ஏற்றத் தாழ்வு பேணப்படும் வரை ஒடுக்குமுறை இருந்தே வந்திருக்கிறது. எனவே இது எவ்வகையில் ஒழிக்கப்படும்? ''ஈழப்புரட்சி''யின் நிதர்சனமே தமிழ் பேசும் மக்களுக்கான பூரண விடுதலையாகும். இதுவே ஈழப் புரட்சி அமைப்பின் இலட்சியம்.

புரட்சிகரத் தத்துவமே மக்களை அணிதிரட்டவல்லது, மக்களே புரட்சிகரத் தத்துவத்தை நடைமுறைப் படுத்துவர். இவை காலத்திற்கு காலம் பிரகடனப்படுத்தப்படுகின்றன. இதற்கொப்ப ஈழப்புரட்சி அமைப்பினது கடந்த காலப் பிரகடனங்கள் :-

☐ தொடர்ச்சி அட்டை மூன்றும் பக்கம் ☐

பாப்லோ நெருடா கவிதைக்கு அட்டைப்பட ஓவியம் :

இளவேனில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாலம்

ஈழ நண்பர் கழக
மாத இதழ்

□

மலர் : 1 இதழ் 5

ஜனவரி 1987

□

தொடர்புகள்
அனைத்துக்கும்
பாலம்
த.பெ.எண். 39
மதுரை-2

□

ஆசிரியரும்
வெளியிடுபவரும்
இரா. திரவியம்

மாபெரும் புத்தகக் ...
இடம்: நல்லூர் (இ. ...
காலம்: ஆகஸ்ட் 17 ...
மாணவர் ...
யாழ்ப்பாண ...

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் இடையே நடந்த மோதலில் 25 க்கு மேற்பட்டோர் மரணமடைந்தனர்.

இது டிசம்பர் 1986ன் துயரம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் தமிழீழ விடுதலை இயக்கத்துக்கும் இடையே நடந்த மோதலில் 100க்கும் மேற்பட்டோர் மரணமடைந்தனர்.

இது சென்ற ஏப்ரல் 1986ன் துயரம்.

துயரம் தான் தொடர்கதையாகிறது. மக்களை கருத்துக்கள் மூலம் வென்றெடுத்து எதிரிக்கு எதிராக ஆயுதங்களைப் பயன்படுத்துங்கள் என்றால் 'நாங்களே ஒருவருக்கு ஒருவராக' கொன்றெடுத்துக் கொள்கிறோம் என்ற பாதைக்கு இறங்கி வந்து விட்டார்கள்.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் பாதையை மீண்டும் ஒரு முறை திரும்பிப் பார்க்கிறோம். சிங்கள இனவெறி இராணுவத்தால் தமிழர்கள் சிந்திய இரத்தத்துக்குக் குறையாத அளவில் தான் 'விடுதலை' எனும் பெயரில் ஆயுதம் தரித்தவர்களால் தமிழர்கள் ரத்தம் சிந்த நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறார்கள்.

மாற்றுக்கருத்துக்களை, மாற்று நடை முறைகளை அனுமதியோம் எனும் காட்டுமிராண்டிகளின் கற்காலம் புது வடிவம் எடுத்து இருக்கிறது.

விடுதலை அமைப்புகளின் நடவடிக்கைகளால் அதிக வேதனைக்கும் ஆறாத துயரத்துக்கும் ஆளாகியிருப்பவர்கள் தமிழக மக்கள் தான். இந்தத் தமிழக மக்களின் ஒன்று பட்ட ஆதரவில் தான் போராளிகள் கால் ஊன்றி நின்றார்கள். ஆனால் இன்று? ஈழப் போராட்டம் குறித்த உணர்வு தமிழக மக்களிடமிருந்து முற்று முழுதாக ஒரு திட்டமிடலின் கீழ் அகற்றப் பட்டுள்ளது.

இதற்கு ஈழப் போராளிகளும் பாதி பங்கேற்க வேண்டும். மீதி ஆளும் வர்க்கத்தின் அரசியல் சித்து விளையாட்டால் விளைந்தது.

வீர தீர ஹீரோயிசப் போக்குகளும் ஆயுதங்களும் மட்டுமே மக்களை வெல்லும் என்ற அராஜக எண்ணங்கள் உலகில் வென்றது கிடையாது. இனி ஈழத்திலும் வெல்லப் போவதும் இல்லை.

விடுதலை அமைப்புக்கள் கடந்த காலத்தைக் துணிவோடு பரிசீலிக்க வேண்டும். தவறுகளை விமர்சிப்பது மட்டுமல்ல அவற்றை முற்றாக நீக்கவும் வேண்டும். இயக்கத்தின் உள் இயக்க ஜனநாயகத்தைப் பேணுவதில் உள்ளத் தூய்மையுடனும் உறுதியுடனும் செயல்பட வேண்டும். 'மக்களே மாபெரும் சக்தி' 'மக்கள் எழுச்சி மூலமே போராட்டம்' என்பதுதான் வரலாற்று சத்தியம்.

இதை மறப்பவர்கள் வரலாற்றின் குப்பைத் தொட்டியில் வீசப்பட்டவர்கள் வரிசையில் நாளை கிடப்பார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிலிப்பைன்ஸ்

# NDF
## தேசிய ஜனநாயக முன்னணி

ஓர் அறிமுகம்

பிலிப்பைன்ஸ் தேச மக்கள் போராட்ட வரலாற்றின் ஒரு பெரும் திருப்பு முனையாக 86 பிப்ரவரியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் அமைந்துள்ளது. மார்க்கோஸ் இராணுவ ஆட்சி தூக்கியெறியப்பட்டு, திருமதி அக்கினோ குழுவினர் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு சகல பூர்சுவா மற்றும் முற்போக்கு அணியினரின் பாத்திரம் முக்கிய இடத்தை வகித்தது. ஓரளவு ஜனநாயகத் தளத்தை உருவாக்குவதில் வெற்றிகண்ட புரட்சிவாதிகள், தற்போது அக்கினோ அரசுடன் போர் நிறுத்த உடன்படிக்கை செய்து, நகர்ப்புற அரசியல் போராட்டத்தில் பெரும்பங்கு வகித்து வருகின்றனர். கடந்த காலத்தவறுகளை விமர்சனம் செய்து, அதில் கிடைத்த அநுபவங்களை எதிர்கால புரட்சிகர திட்டங்களுக்கு உரமாக்கி, வெகுஜனங்களை அணிதிரட்டுவதில் வெற்றியீட்டிவரும் தேசிய ஜனநாயக முன்னணியின் (NATIONAL DEMOCRATIC FRONT) கடந்த கால அரசியல் வரலாற்றை ஆராய்வது படிப்பினையாக அமையும்.

1960களில் ஏற்பட்ட புரட்சிகரமான மக்கள் எழுச்சியினூடு 'தேசிய ஜனநாயக இயக்கம் பிலிப்பைன்சில் தோற்றம் பெற்றது. 1964 நவம்பர் 30ந் தேதி ஆரம்பிக்கப்பட்ட 'தேச பக்த இளைஞர் அணி' (Kabataang Makabayan) என்ற முற்போக்கு இளைஞர் இயக்கம் மாபெரும் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து புரட்சிக்குத் தேவையான போராட்டப் பாதைக்கு மூன்று அடிப்படை ஆயுதங்களான, சரியான ஒருங்கிணைக்கப்பட்ட அரசியல் கட்சி, மக்கள் இராணுவம், மற்றும் புரட்சிகர தேசிய முன்னணி என்பவற்றின் தேவையை அங்கீகரித்தது. ஏனைய தேசிய ஜனநாயக இயக்கங்கள், 60 களின் கடைப்பகுதியில், முன்னெப்பொழுதும் நிகழா புரட்சிகர ஆர்பாட்டங்களை விரிவுபடுத்தின. மாணவ இளைஞர்கள் தொழிற்சாலைகளுக்கும், கிராமப்புறங்களுக்கும் சென்று தொழிலாளர் விவசாயிகளுடன் தம்மை இணைத்துக் கொண்டனர். 1968 டிசம்பர் 26ம்தேதி பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி (CPP) திரும்பவும் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டது. சில மாதங்களின் பின் 1969 மார்ச் 29 இல் புதிய மக்கள் இராணுவம் (New People's Army) உருவாக்கப்பட்டது. 70களின் ஆரம்பப் பகுதிவரை மக்களை அணிதிரட்டும் நடவடிக்கை தொடர்ந்தது. 1970 இல் தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் இதர பிலிப்பைன்ஸ் சமூகத்தினர் தொடர்ச்சியான புரட்சிகர வெகுஜன நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

1972 செப்டம்பர் 21 இல் மார்க்கோசினால் கொண்டுவரப்பட்ட இராணுவச் சட்டத்தினை அடுத்து, CPP, NPA, CNL மற்றும் தேசபக்த தனி நபர்கள் இணைந்து தேசிய ஜனநாயக முன்னணிக்கான (NDF) கமிஷனை உருவாக்கினர். 1972 நவம்பரில் 'விடுதலை' (LIBERATION) என்ற உத்தியோக பூர்வ பத்திரிகை வெளியிடப்பட்டு, அமெரிக்க-மார்க்கோசு சர்வாதிகார அரசை தூக்கியெறியும் வண்

www.tamilarangam.net



'இலங்கையின் தேசியபானம்'
என்று
பால்விடாத
'வெறுந் தேத்தண்ணி'யை
சிறிலங்கா அரசு
அன்று சொன்னதன் அர்த்தப்பரிமாணம்
இன்று தானே புரிகிறது.

தமிழ்க் குருதிக்கும்
வெறுந் தேநீருக்கும்
வித்தியாசம் இல்லையென்று

***விஜயா***

---

**32 ஆயிரம் முழு நேர - பகுதி நேர போராளிகள் உள்ளனர்.**


**62 மாநிலங்களில் தமது கொரில்லா தளங்களை அமைத்துள்ளனர்.**

ணம் பிலிப்பினோ மக்களை அணிதிரட்ட 10 அம்சதிட்டமொன்று முன் வைக்கப்பட்டது. இராணுவச்சட்டத்தின் கீழ் தேசபக்த இளைஞர் அணி (KM) தடைசெய்யப்பட்டதன் பின் 1977 நடுப்பகுதியில் ஏற்பட்ட நாடுதழுவிய மாணவர் பகிஷ்கரிப்பு நடவடிக்கையினூடே மறுபடியும் தீவிரமாக இயங்க ஆரம்பித்தது. 79-80 களில் NPA துரித வளர்ச்சியடைந்து லூசோன் (LUZON), மின்டானோ (MINDANOA), மேற்கு விசயாஸ் (WEST VISAYAS) மாகாணங்களில் இராணுவத்திற்கெதிரான முற்றுகைகளை (RAIDS) மேற்கொண்டது. 1980 மார்ச் வரை புரட்சிகர விவசாய இயக்கத்தில் (PKM), 800,000 உறுப்பினர்கள் அணி திரட்டப்பட்டனர்.

தேசிய ஜனநாயக முன்னணியானது (NDF) தேசிய விடுதலையையும், உண்மையான ஜனநாயகத்தையும் நேசிக்கும் பரந்துபட்ட மக்கள் வெகுஜன இயக்கங்களையும் உள்ளடக்கிய ஒரு புரட்சிகர ஐக்கிய முன்னணியாகும். இம் முன்னணியின் கீழ் தேசபக்த இளைஞர் அணி (KM), பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி (CPP), புதியமக்கள் இராணுவம் (NPA). தேசிய விடுதலைக்கான கிறிஸ்தவர்கள் அணி (CNL), புரட்சிகர விவசாய இயக்கம் (PKM), புரட்சிகர தொழிலாளர் இயக்கம், தேசிய சுகாதார சங்கம் (MASAPA), தேசிய வாத ஆசிரியர் சங்கம் (KAGAMA), புதிய பெண்கள் தேசபக்த இயக்கம் (MAKI-BAKA), கோடிலெரா மக்கள் ஜனநாயக முன்னணி (CPDF) போன்ற முற்போக்கு இயக்கங்கள் ஒன்றிணைந்துள்ளன. இம் முன்னணியின் இராணுவப் பிரிவான புதிய மக்கள் இராணுவத்தில் (NPA) 32,000 முழுநேர-பகுதிநேர போராளிகள் உள்ளனர். அத்துடன் பிலிப் பைன்சின் 73 மாகாணங்களில், 62 இல் தமது கொரில்லாத் தளங்களை அமைத்துள்ளனர். ஒரு கோடி மக்களின் பரந்துபட்ட ஆதரவு இவர்களுக்கு உண்டு. தேசிய, மாகாண, நகர்ப்புற, கிராம மட்டத்தில் அடிப்படை ஸ்தாபன கட்டமைப்புகளை நிறுவி, நிலச்சீர்திருத்தம், சுகாதார வசதிகள், கல்வி வளர்ச்சி திட்டங்களை ஏற்படுத்தி, சோசலிச இலக்கை அடைவதற்கான பாதையில், தேசிய ஜனநாயகப் புரட்சியை ஓர் இடைக் கட்டமாகக் கொண்டு தமது குறுகியகால, நீண்டகால - மூல, தந்திரோபாயங்களை வகுத்துள்ளனர். □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அந்தப் போலீஸ் அதிகாரி மிரட்டும் தொனியில் ''எங்களை முட்டாளாக்கப் பார்த்தால் இவையெல்லாம் உங்களுக்காகத்தான் காத்துக்கொண்டிருக்கின்றன'' என்றான்.

அதிகாலை இரண்டு மணி அளவில் மீண்டும்' அந்த ''விசாரணை அறைக்கு கொண்டுவரப்பட்டோம். நாங்கள் வரும் வழியில் இருந்த ஒவ்வொரு அறையையும் தலையை நீட்டி எட்டி எட்டிப் பார்த்துவந்தேன். ஆனால் எங்கும் ட்ராய் இருப்பதாக அடையாளமே தெரியவில்லை.

''என் கணவர் என்னைப் பார்க்க விரும்புகிறார் என்று சொன்னீர்களே! அவர் எங்கே இருக்கிறார்? என்று அந்தப் போலீஸ் அதிகாரியிடமே கேட்டேன்.

''நேற்றுப் பகலில் விசாரணைக்காக இங்கேதான் இருந்தான். நாங்கள் அரசாங்கத்தின் ''இணைப்புக்'' கொள்கை பற்றி அவனுக்கு விளக்கிச் சொல்ல விரும்பினோம். தனது குற்றத்திற்காக வருந்தி மனம் மாறி, வியத்காங்குகளை கைவிட்டு விலகி அரசாங்கத்திற்கு ஆதரவாக வந்து விட வேண்டும் என்று அரசாங்கத்தின் கொள்கையை விளக்க விரும்பினோம். அதற்கு அவன் ஒப்புக்கொண்டிருந்தால், உடனே நீங்கள் இருவரும் இந்நேரம் ஒன்று சேர்ந்திருக்கலாம். ஆனால் நாங்கள் ஒரு வார்த்தை சொல்வதற்கு முன்னதாகவே, இந்தச் சன்னல் வழியே குதித்து தனது காலை ஒடித்துக் கொண்டான். இப்பொழுது சோரே ஆஸ்பத்திரியில் இருக்கிறான்.'' என்றான்.

## உன் அடிச்சுவட்டில் நானும் . . .

பான் தி குயென் □ தமிழில் : பொன்னி வளவன்

www.tamilarangam.net



எனக்கு அழுகை வெடித்துக் கிளம்பியது. ''நீங்கள் அவரை அடித்து காலையும் ஒடித்துவிட்டு, அவர் சன்னல் வழி குதித்து, தானே காலை முறித்துக்கொண்டார் என்று மற்றவர்களையும் நம்பச்செய்ய முயற்சிக்கிறீர்களா....?''

''இந்த நட்ட நடுச்சாமத்தில் இந்த மாதிரிப் பாசாங்குத்தனமாகக் கூச்சல் போடாதே. நான் உனக்கு உண்மைச் சொல்லியிருக்கிறேன். சீக்கிரத்தில் நீயே அறிந்து கொள்வாய். உன்னிடமிருந்து எதையும் இங்கே யாரும் மறைத்து விடவில்லை...''

''என்னுடைய கணவர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தால், என்னை வீட்டிற்குச் செல்ல அனுமதித்தாக வேண்டும்.''

''நீ எப்பொழுது போகலாம் என்பதைச் சொல்வேன்''

அதன் பிறகுதான் உண்மையில் நானும் கைதுசெய்யப்பட்டிருக்கிறேன் என்பதை அறிந்து கொண்டேன். ஆகவே, போலீஸ் தலைமையகத்திலேயே நானும்வைக்கப்பட்டேன்.எனக்குத் தேவையான உடைகளையோ, படுக்கை விரிப்புகளையோ எடுத்துவரக்கூட அனுமதிக்கப்படவில்லை. ஒவ்வொரு நாளும் விசாரணை மண்டபத்திற்கு வலுக்கட்டாயமாகக் கொண்டுவரப் பட்டேன். அங்கு மக்நமாராவைக் கொலை செய்ய முயற்சி செய்ததில் சம்பந்தப் பட்டவர்கள் என்று சந்தேகப் பட்டவர்களை எல்லாம் விசாரிக்கவும், கடுமையாக அடிக்கவும் செய்தார்கள்.

இவர்களிலெல்லாம் ரொம்பவும் காட்டுமிராண்டித்தனமாக அடித்து நொறுக்கப்பட்டவன் (Loi) லாய்தான். அவன் ட்ராயுடன் சேர்த்துக் கைது செய்யப் பட்டவன்.

தாயகத்தின் அடிமைத் தளையறுக்க வியத்நாம் ஓர் உருவாகி ஆவேசத்தில் எழுந்தது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அட்டூழியங்களையும் சித்தரவதைகளையும் மீறி போராட்டம் நடந்த கதை.

□

ட்ராய் தப்பிச்செல்ல முயன்று தோல்வி அடைந்த அதே நாள் மாலையில், லாய் தனது விலங்கை வெற்றிகரமாக உடைத்தெறிந்துவிட்டு, சிறைச்சாலை சுற்றுச் சுவரில் ஏறிவிட்டான். ஆனாலும் அவன் மீண்டும் பிடிபட்டுப் போனான். இப்பொழுதுதான் அவனை முதன் முதலாகப் பார்க்கிறேன். லாய் பதினெட்டே வயது நிரம்பிய வாலிபன்; ட்ராயினுடைய அதே கிராமத்தைச் சேர்ந்தவன். முதலில் லாயைச் சிறைக்குக் கொண்டுவந்த போது ஏனைய கைதிகள் அவனுடைய பார்வையையே விரும்பவில்லை. கடல் அலைகளைப்போல கற்றை கற்றையாக அவனது முகத்தின் மீது தலைமுடி விழுந்து கிடக்கும். பிடரியிலும் நீளமாகத் தொங்கும். இந்தப் புறத்தோற்றம் அவனை ஒரு 'தெருப் பொறுக்கி' என்று எண்ணும்படி வைத்திருந்தது. ஆனல் பின்னர் எல்லோரும் நன்கு அறிந்துகொள்ள முடிந்தது. அவன் ஒரு 'பார்பர் ஷாப்பில் வேலை செய்துவந்தான். மக்நமாரா கொலை முயற்சியில் சம்பந்தப்பட்டிருக்கிருன் என்பதை அறிந்த பிறகு தான் அவனை அவனது முதலாளியே மிகவும் விரும்பியிருக்கிருர்; நன்ருகக் கவனித்துக் கொண்டிருக்கிருர்.

விசாரணை அறையில் லாய் பிரம்பினல் மிருகத்தனமாகத் தாக்கப் பட்டான். லாயின் மீது விழுந்த ஒவ்வொரு அடியும் என்னைக் கதறவைத்தது. ஏனெனில் ட்ராயிடம் இந்த மிருகங்கள் நடந்துகொண்டிருக்கும் முறை இதைவிட இன்னும் கொடுமையாக இருந்திருக்கும் என்று எனக்குத் தெரியும். ஈவிரக்கமின்றி அடித்து நொறுக்கப்பட்டபோதும் லாய் வாய் திறந்து ஒரு வார்த்தையும் பேசவில்லை.

அவன் மயக்கமடைந்து விழுந்து விட்டபோது, அவனை அறையின் மூலையில் இழுத்துப் போட்டுவிட்டனர். பிறகு ஒரு சமயம் நாங்கள் இருவரும் எங்களுக்காகக் கொடுக்கப்படும் உணவை பெற்றுக்கொள்ள வரும்போது சந்தித்துக் கொண்டோம். அப்பொழுது லாய் ''நடந்த நிகழ்ச்சிகள் முழுவதுமே தானே முயன்று செய்தது என்றும் தன்னோடு யாரும் தொடர்பு கொண்டிருக்கவில்லை என்றும், எனவே தானே எல்லாவற்றிற்கும் முழுப் பொறுப்பாளி என்று ட்ராய் போலீசாரிடம் கூறிவிட்டார். திரும்பத் திரும்ப எவ்வளவு தான் அடித்தாலும் திரும்பத் திரும்ப இதையேதான் கூறிக் கொண்டிருந்தார். அவர் உண்மையிலே மிகத் தைரியமான மனிதர். சன்னல் வழி அவர் குதித்தபோது நான் அங்குதான் இருந்தேன். நான் அவரை அடுத்து உட்கார்ந்திருந்தேன். முதலில் அவர் போலிசாரையும், பிறகு சன்னலையும் நோட்டம் விட்டார். மறு விநாடி, கையில் விலங்கு மாட்டப்பட்டிருந்தும் திடீரென யாரும் எதிர்பாராவிதமாக மின்னலைப்போல குதித்துவிட்டார். வெளியே தாவியபோது ஓடிக் கொண்டிருந்த ஏதாவது ஒரு காரின் மீது விழுந்திருந்தால் தப்பித்திருப்பார்''......'' என்று அவசர அவசரமாகக் கூறிவிட்டுச் சென்ருன்.

போலிசாரின் அடுத்த தாக்குதலுக்கு ஆளானவன் ஹுயா தான். ஹுயாவுக்கு ட்ராய் சித்தப்பா முறை. இருவரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரே எலக்ட்ரிக்கல் ஷாப்பில் வேலை செய்தார்கள், ஆகவே இந்தப் பையன் கண்டிப்பாகத் தனது சித்தப்பாவிற்கு உதவி செய்திருக்கவேண்டும் என்றே போலீசார் தாங்களாகவே தீர்மானம் செய்து கொண்டு விட்டார்கள். ஹூயாவுக்கு பதினேழு வயதுதான் ஆகியிருந்தது. இவன் ட்ராயுடன் பங்குகொள்ளாதிருந்தால் கூட, இவனுக்கு 'அது' பற்றி ஏதாவது தகவல் தெரிந்திருக்கலாம் என்று எண்ணினர் போலும். அந்த இளம் சிறுவனை எத்துணை அடித்து நொறுக்கினர்களோ! ஆனல் அவனே ''என்னுடைய எஜமானர் என்ன வேலை கொடுத்தாரோ அந்த வேலையைத்தான் என் சித்தப்பா செய்துவந்தார். அதைத்தவிர வேறு எதுவும் எனக்குத் தெரியாது'' என்பதையே திரும்பத் திரும்பக் கூறி வந்தான்.

மூன்று நாட்கள் கழித்து ட்ராயைப் பார்ப்பதற்கென்று என்னை ஒரு காரில் ஏற்றி அந்தப் போலீஸ் அதிகாரி கொண்டு சென்றன். அந்தக் கார் போகிற வழியில் தெருவைச் சுட்டிக்காட்டி, ''உன்னுடைய ட்ராய் எவ்வளவு முட்டாள் என்பதைப் பார். ஜனங்கள் எவ்வளவு அமைதியாக வேலைக்குச் செல்கிறர்கள். அவர்கள் எல்லா வற்றையும் அனுபவிக்கிறர்கள். ஆனல் உன்னுடைய ட்ராய் வியத்காங்குகளின் சொல்லைக் கேட்டு மாட்டிக் கொண்டுவிட்டான். அவன் ஒரு இடத்திலே, நீ ஒரு இடத்திலே பூட்டப்பட்டுக் கிடக்கிறீர்கள்'' என்று சொன்ஞன்.

இன்னும் எவ்வளவோ அந்தப் போலீஸ் அதிகாரி கூறிக் கொண்டே வந்தான். ஆனல் கார் எஞ்சின் எழுப்பிய ஓசையில் அவனது குரல் முழுக்க அடங்கிப் போய்விட்டது. ஏதோ சில சொற்கள்தான் என் காதில் விழுந்தன. சோரே

ட்ராய் தலையை அசைத்து மறுத்தார். ''குற்றவாளி என்ற பேச்சுக்கே இடமில்லை. அது ஒரு குற்றமே கிடையாது. அமெரிக்க ஆக்கிரமிப்பாளரைக் கொல்வது நாட்டுக்குச் செய்யும் சேவையே தவிர, குற்றமில்லையே! அதை நானே தான் செய்தேன். வேறு எவரும் செய்யவில்லை. மக்நமாராவைக் கொல்லவேண்டும் என்று நானே தான் திட்டமிட்டேன்.''

□

ஆஸ்பத்திரி வாயிலை அடைந்தவுடன் அவசரமாக சில பழங்களை ட்ராய்க்காக வாங்கிக் கொண்டேன்.

ட்ராய் ஒரு அறையில், வேறு ஆறு பேருடன் பூட்டப்பட்டிருந்தார். வெளி உலகிலிருந்து பிரிக்கும் வகையில் கம்பி வலையில் ஆன கதவு இழுத்து மூடப்பட்டிருந்தது. சன்னல்கள் கூட பார்க்க முடியாத படி மறைக்கப்பட்டிருந்தன. அறைக்கு வெளியே போலீசார் பலர் காவல் இருந்தனர்.

நான் அறைக்குள் நுழைவதைப் பார்த்தவுடன் எழுந்து உட்கார முயற்சி செய்தார். ஆனல் மிகவும் பலவீனமாக விருந்ததால் திரும்பவும் படுக்கையிலே சாய்ந்து கொண்டார். கையை ஊன்றி சாய்ந்த வண்ணம் ''கைது செய்யப்பட்டவர்கள் எல்லாரும் விடுதலை செய்யப்பட்டு விட்டார்களா? எல்லாரும் விடுதலையாகிவிட்டார்களா?'' என்று தான் முதலில் கேட்டார்.

படுக்கையின் மீது அவருக்கு அருகில் அமர்ந்தேன். அவரால் நேசிக்கப்பட்ட அனைவரும் கைதிகளாக இருந்தும் அவர்கள் சித்ரவதை அனுபவித்த போதும்கூட அவருக்கு உறுதிகூறும் வகையில் பொய்யாக, ''அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள். நீங்கள் கவலைப்படாதீர்கள். நான் மட்டும்தான் எஞ்சி இருக்கிறேன்'' என்றேன்.

அவருடைய உடலில் ஒரே ஒரு கால்சட்டை மட்டுமே இருந்தது. நெஞ்செல்லாம் வரிவரியாக தடிப்புகளும், சிராய்ப்புகளும் நிறைந்திருந்தன. அவை பிரம்பாலும் சாட்டையினலும் பெற்ற அடிகளினல் ஏற்பட்ட வடுக்கள். அவரது வலது கால் இடுப்பிலிருந்து முழுமையாக கட்டு போடப்பட்டிருந்தது. மிக மோசமாக மெலிந்து, கண்கள் குழி விழுந்து, கன்னமெல்லாம் வீங்கிப் போயிருந்தது. முகமெல்லாம், குறிப்பாக நெற்றியில் காயங்கள் நிறைய இருந்தன. அவரைப் பார்த்தபிறகும் என் கண்ணீரைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியவில்லை.

''ரொம்பவும் நோவு எடுக்கிறதா'' என்றேன்,

''ரொம்பவும் இல்லை, லேசாக இருக்கிறது. நான் இப்போது தூங்கமுடியும். உன்னையும் அடித்தார்களா?''

''இல்லை.''

''உண்மையாக?''

''என்னைப் பாருங்கள். ஆனல் என்னைக் கணக்கில்லாமல் கேள்விகள் கேட்டு துளைத்து எடுத்தார்கள்''

அவர் என் கரங்களை எடுத்துக் கொண்டார். அன்பும் இரக்கமும் கலந்த பார்வையால் என்னை விழுங்கினர். அவரிடம் நான் குரல் கம்மக் கூறினேன்.

''என்னை மன்னித்து விடுங்கள். அன்றைக்கு மாலையில்

www.tamilarangam.net



நீங்கள் புறப்பட்டபோது நான் மிகவும் அழுத்தமாகவும் கோபமாகவும் நடந்து கொண்டேன். என்னை அதற்காக மன்னித்து, அந்தத் தயவு செய்து மறந்து விடுங்கள்.'' அவர் புன்னகை செய்தவாறே சொன்னார், ''இல்லையே, அது என்னுடைய தவறு, அதெல்லாமே என்னுடைய தவறுதான்! உன்னிடம் எனக்கு ஒரு போதும் கோபமே இல்லை. உன்னை நான் நேசிக்கிறேன். அளவற்ற முறையில் காதல் கொண்டிருக்கிறேன்''

அப்பொழுது போலீஸ் அதிகாரி இடைமறித்தான்; ''இந்த மாதிரி விஷயங்களைப் பற்றியெல்லாம் பேச வேண்டுமானால் நீங்கள் உங்கள் வீட்டிற்குப் போய் பேசிக்கொள்ளுங்கள். அதுவரை பொறுத்திருங்கள். நீங்கள் இருவரும் மீண்டும் இணைவதற்கு உதவி செய்யவே இங்கிருக்கிறேன்.''

ட்ராயின் பக்கம் திரும்பிச் சொன்னார்: ''நீ ஏன் சன்னல் வழியாகக் குதித்தாய். நான் அரசாங்கக் கொள்கையை விளக்கத்தான் தொடங்கினேன். அரசாங்கத்தின் கொள்கையை ஒரு முறை புரிந்து கொண்டு வியத்காங்குகளிடமிருந்து விலகிவிட்டால் நீ மீண்டும் உன் குடும்பத்திற்கே திரும்ப அனுமதிக்கப்படுவாய். அதைப் பற்றி நினைக்கையிலே உனக்கு மகிழ்ச்சி ஏற்படவில்லையா? ஆனால் நான் அதைச் சொல்லத் தொடங்கு முன் நீ....

ட்ராய் பொறுமையிழந்து இடை மறித்தார். ''உன்னுடைய அரசாங்கத்தின் கொள்கைகளை விளக்குவதற்காக உன்னுடைய ஆவியை ஏன் வீணடித்துக் கொள்கிறாய்.''

போலீஸ் அதிகாரி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு தேன் சொட்டும் வகையில்

என்னுடைய மனைவியின் உருவம் என்னுடைய நாட்டையும் மறக்கச் செய்துவிடும் என்று மனப்பால் குடித்திருக்கிறீர்கள். உங்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் உங்கள் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறீர்கள் இந்த மண்ணில் அமெரிக்க வெறியர்கள் இருக்கும் வரை எந்த மனிதனுக்கும் சந்தோஷம் கிடையாது''.

□

பேசினார்: ''இந்த நடவடிக்கையில் நீதான் பிரதானமான குற்றவாளி அல்ல என்று எனக்குத் தெரியும்; அது வேறு யாராவது இருக்கும்.''

ட்ராய் தலையை அசைத்து மறுத்தார். ''குற்றவாளி என்ற பேச்சுக்கே இடமில்லை. அது ஒரு குற்றமே கிடையாது. அமெரிக்க ஆக்கிரமிப்பாளரைக் கொல்வது நாட்டுக்குச் செய்யும் சேவையே தவிர குற்றமில்லையே! அதை நானே தான் செய்தேன், வேறு எவரும் செய்யவில்லை. மக்நமாராவைக் கொல்லவேண்டும் என்று நானே தான் திட்டமிட்டேன்.''

போலீஸ் அதிகாரி இன்னும் பொறுமையாக அவரை எப்படியும் தன் பக்கம் இழுத்துக் கொள்வதில் வெற்றிபெற முயற்சி செய்தார்.

''மீண்டும் நன்றாக யோசித்துப் பார். நீ செய்தது மிகப் பெரிய குற்றம் என்பதை நீ அறியவில்லையா? ஒரு உயர் மட்ட அமெரிக்கரின் உயிருக்கு வேட்டுவைக்க நினைத்தது எவ்வளவு பெரிய குற்றம்?''

அவன் ஒரு ஏகாதிபத்தியப் பன்றி என்பதை நான் அறிந்திருந்ததால்தான் என் உயிரே போனாலும் சரி என்று அவனை கொல்ல முயன்றேன்.''

படுக்கையைச் சுற்றிலும் நின்று கொண்டிருந்த போலிசார் ஒருவருக்கொருவர் பொருள் பொதிந்த பார்வையைப் பரிமாறிக் கொண்டார்கள். அவர்கள் ட்ராய் மீது பாய கை அரிப்பு எடுத்துக் கொண்டிருந்தாலும் அதிகாரி மிக அமைதியாக, உன்னுடைய அழகான, இளமை ததும்பும் மனைவியை நினைத்துப் பார். அவளுக்காகவாவது இரக்கப்படு. சில நாட்களுக்கு முன்புதான் அவளை மணம் முடித்திருக்கிறாய். அவளுடைய வாழ்க்கையையே நாசம் செய்துவிடாதே!''

''நான் கைது செய்யப்பட்டதிலிருந்து இன்றுவரை நாங்கள் எவ்வாறு, எப்பொழுது திருமணம் செய்துகொண்டோம் என்பதைத் தான் விடாமல் சங்கு ஊதிக்கொண்டிருக்கிறீர்களே. எங்கள் திருமணப் புகைப்படத்தை என் முகத்திற்கு நேராகத் திணித்து, காதலையும், மகிழ்ச்சியையும், சுகத்தையும் பற்றி நீண்ட பிரசங்கங்கள் செய்திருக்கிறீர்கள்.

என்னுடைய மனைவியின் உருவம் என்னுடைய நாட்டையும் மறக்கச் செய்துவிடும் என்று மனப்பால் குடித்திருக்கிறீர்கள், உங்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் உங்கள் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த மண்ணில் அமெரிக்க வெறியர்கள் இருக்கும் வரை எந்த மனிதனுக்கும் சந்தோஷம் கிடையாது.''

ட்ராயினுடைய இந்த உறுதியான போக்கை பொருட்படுத்தாததைப் போல காட்டிக் கொண்ட போலிஸ் அதிகாரி மீண்டும் தொடங்கினான்:

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''நேற்று உனக்குப் பொழுது போவதற்காக ஒரு 'டேப் ரிக்கார்டர்' கொண்டு வந்து கொடுத்தேன். அதில் வட வியத்நாமிலிருந்து தப்பித்து, 17வது அட்சரேகையை கடந்து தெற்கே வந்திருக்கிற ஒரு மாணவன் கூறிய கதை இருந்தது. ஒரு 'கம்யூனிஸ்ட் இரும்புத் திரைக்குப் பின்னால் தான் பெற்ற அனுபவங்களைக் கூற, அங்கிருந்து தப்பி வந்து சேருகிறவர்களைப் பார்ப்பதோ, அல்லது அவர்கள் கூறுவதைக் கேட்பதோ மிக அரிது. ஆனால் அரசாங்கத்தின் தாராள மனப்பான்மையை உணர்ந்து கொள்ள நீ மறுக்கிறாய். அந்த 'டேப் ரிக்கார்டரைக் கூட உடைத்தெறியத் துணிந்து விட்டாய். எல்லை மீறி நீ சென்று விட்டாய் எவ்வித மான மனிதத்தன்மை நிறைந்த எந்தக் கொள்கையும் உனக்குப் பயன்படுத்த முடியாது.''

''அந்த அவலட்சணம் பிடித்த மாணவன் மட்டும் என் முன்னால் இருந்தால், நிச்சயமாக அந்த டேப்ரிக்கார்டரை உடைத்திருக்க மாட்டேன். அவனுடைய மண்டையைப் பிளந்திருப்பேன். அவன் வட வியத்நாமை மட்டும் அவதூறு செய்யவில்லை. தலைவர் ஹோ சி மின்னையும் அவதூறு பேசத் துணிந்து விட்டானே. அவனுக்கு எவ்வளவு திமிர் இருக்க வேண்டும்.'' ட்ராய் ஒவ்வொரு வார்த்தையையும் அழுத்தமாகவும் உரக்கவுமே பேசினார். படுக்கையில் கிடந்தவாறு மேல்மூச்சு, கீழ் மூச்சு வாங்கினார். அவரது முகமே கோபத்தினால் சிவந்துவிட்டது. இன்னும் என்ன வெல்லாமோ சொல்ல விரும்புகிறார் என்பது தெரிந்தது. போலீஸ் அதிகாரி எப்படியோ அமைதியாக இருந்தார். பிறகு ''நான் வேறு ஒரு நாளைக்கு வருகிறேன்.'' என்று கூறிவிட்டு என்னை நோக்கி, ''நீயும் கூடப் புறப்படுகிறாய், நேரம் ஆகிவிட்டது'' என்றான்.

நான் அவசர அவசரமாக ஆரஞ்சுப் பழத்தை உறித்து ஒரு பாதியை அவருடைய கையில் கொடுத்து விட்டு மீதியை அவரைத் தின்னும்படி கூறினேன். அவரது காதுக்கருகே குனிந்து, ''நீங்கள் எங்கெல்லாம் போகிறீர்களோ அங்கெல்லாம் நானும் தொடர்ந்து வருவேன். எந்த நேரமும் உங்களை வேறு இடத்திற்கு கொண்டு செல்லலாம். குடும்பத்திற்கு மட்டும் அது தெரிய வேண்டும்'' என்று ரகசியமாகக் கூறி விடை பெற்றேன்.

பொதுப் போலீஸ் இலாகாவின் கீழிருந்த வேறு ஒரு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு விட்டேன். என்னுடன் பத்துப் பேர் அடைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களில் இருவர் என்னுடைய வயதை ஒத்தவர்கள். அவர்களில் ஒருத்தி 'ஏ' பள்ளி மாணவி. அமெரிக்க எதிர்ப்பு 'போர்டுகளை' கட்டிய குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டவள். மற்றொருத்தி 'ஒய்' வியாபார நிறுவனத்தில் பணியாற்றியவள். இந்தப் பெண் மிகக் காட்டுமிராண்டித்தனமாக கொடுமைப் படுத்தப்பட்டாள். அவள் வேலை செய்து வரும் நிறுவனத்தில் தேசிய விடுதலை முன்னணியின் கொடிகளும், சில தஸ்தாவேஜுகளும் இருந்ததுதான் காரணமாம். இன்று காலையில் கூட, விசாரணை அறையிலிருந்து நடக்க முடியாமல் சுவரைப் பிடித்துக்கொண்டே நடந்து வந்தாள். நகக் கண்களுக்குள் ஊசி ஏற்றி விரல்களிலிருந்து ரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது. அறைக்குள் தள்ளாடி நுழைந்தவுடனே தன் சிநேகிதியின் தோளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு குமுறிக் குமுறி அழுதாள். எவ்வளவு தேற்றியும் சமாதானம் அடையவில்லை.

''என்னை அழவிடுங்கள். இங்கே தான் என்னால் அழ முடியும். என் சிநேகிதிகளுக்கு முன்புதான் நானும் அழுவேன். எதிரிகளுக்கு முன்பு என்றும் அழுததில்லை, அழவுமாட்டேன். ஆனால் எவ்வளவு உறுதியுள்ளவள் என்பதையே காட்டியிருக்கிறேன். நான் இந்தச் சிறைக்கு வந்து இரண்டு நாட்களாகியும், இது வரை யாரையும் சிநேகம் செய்து கொள்ள வில்லை. ஏனைய கைதிகள் அனைவரும் என்னை சந்தேகக் கண் கொண்டு, வெறுப்பாகவே நோக்குவார்கள்.

அன்று மாலை உணவுக்குப் பிறகு, எங்கள் சிறைக்குள் ஒரு பாடல் ஓசை மெல்ல வெளிவந்தது. ஒரு பெண் ஓரடியைப் பாடியவுடன், மற்ற பெண்கள் அதனைக் கோஷ்டியாக, மிக மெல்லிய குரலில் பாடினார்கள். 'ஒய்' யும் பாடினாள். அவள் அனுபவித்திருக்கும் சித்திரவதைக்கும், முகம், உடல் ஆகியவற்றில் ஏற்பட்டிருக்கும் ரத்தக் காயங்களுக்கும், அவள் அழ முடியுமே தவிர பாடுவாள் என்று கொஞ்சமும் எதிர் பார்க்கவில்லை. ஆனால் அவளோ சிறையின் கம்பிக் கதவுகளின் மீது சாய்ந்து உட்கார்ந்து, எங்களை நோக்கிய வண்ணம், அமைதி தவழும் முகத்துடன் மெல்லப் பாடவே செய்தாள். பலமாகக் கட்டுப் போடப்பட்டிருந்த அவளது கைகள் மேலும் கீழும் ஆடி அசைந்தன. அவை தாளத்திற்காக அசைந்தன. சிறிது நேரம் கழித்து என்னைப் பார்த்தாள்.

தொடரும்

www.tamilarangam.net

"மூர்க்கமான அதே சமயம் கூச்ச சுபாவமுள்ள கவிஞனாக இருக்கும் நான், மக்கள் போராளியாகவும் ஆகியிருக்கிறேன். பேனாவால் கவிதைகள் எழுதும் என் கைகளில் எந்திரத் துப்பாக்கியையும் ஏந்தியிருக்கிறேன். இது ஒரு கலைஞனின் மரணத்தை குறிப்பதாகாது. அவனது கவித்துவத்தைக் குறைப்பதாகாது. மாறாக கவித்துவமும் போர்க்குணமும் சேர்ந்த கூட்டுக் கலவையாய் நான் ஒரு 'போராளிக் கவிஞனாக இருக்கிறேன்.'

# கவிதைகள் எழுத பேனா ஏந்தியிருக்கும் என் கைகளில் எந்திரத் துப்பாக்கியையும் ஏந்தியிருக்கிறேன்

## பிலிப்பைன்ஸ் கவிஞர் இமானின் போராட்ட வாழ்க்கை

இந்த உலகில் ஈடு இணையற்றது எது?

தாய் தன் மகன் இறந்து போனதற்காக அழும் கண்ணீரல்ல. மாறாக தாய் நாட்டின் விடுதலைக்காய் சிந்தப்படும் ரத்தமே ஈடற்றது, இணையற்றது என்றால் பிலிப்பைன்ஸ் கவிஞன் 'இமானுவெல் லக்கபா'வின் வீரமரணம் இணையற்றதுதான்.

நிகரற்ற அவனை இழந்து அவனது தாயகமான பிலிப்பைன்ஸ் கண்ணீரில் கலங்கிப் போனது. பழி தீர்க்கும் கோப வெறியில் கொந்தளித்தது.

இனிய கனவிலும் மேம்பட்ட அழகிய தேசத்தை நிர்மாணிக்கப் போராளியாய் மாறிய அந்தக் கவிஞன் பச்சைப் படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி நெஞ்சைப் பதறவைக்கும் ஒரு கொடிய சம்பவம்.

இறந்து சில நாட்கள் கழித்து டாகமிலிருக்கும் பொது இடுகாட்டில், அவன் தாயின் முன்னிலையில், அவனது மண்ணரித்த உடல் வெளியே தோண்டி எடுக்கப்பட்டது. புத்திர சோகத்திலும் தேச விமோசனம் நாடிய வீரனாய் தன் மகன் இறந்தான் என்ற பெருமிதமும் துளிர்க்க அந்தத் தாய் மௌனமாய்க் கண்ணீர் வடித்தாள்.

விடுதலைப் பெருவெளியில் கட்டற்று நடைபயில விரும்பிய அவன் கால்கள் சவமாகித் துவண்ட நிலையிலும், நீண்டுத் தடித்த கயிறால் இறுகப் பிணைக்கப்பட்டிருந்தது. நெடுந் தொலைவிற்கு அப்பாலிருந்து விலங்கைவிட கேவலமாய் கருதி அவனைக் கட்டி தரையில் இழுத்து வந்ததின் குரூர சாட்சியாக அந்தக் கயிறு ரத்தக் கறைகளுடன் இறந்தபாம்பைப் போல் சுற்றிக் கிடந்தது.

இமானுவெலின் முகமும் கைகளும் அழுகியதுபோல் காட்சியளித்தன. அழுக ஆரம்பித்திருந்த உடலில் அவன் அணிந்திருந்த ஆடைகள் ஒட்டியும் ஒட்டாமலுமிருந்தன. அச்சவ உடலிலிருந்த மச்சங்களில் தன் தீரப் புதல்வனை இனம் கண்டாள் அந்தத் தாய். அப்போது அங்கு வந்து கூடிய சில விவசாயிகள் அவன் உடலை கண்ட மாத்திரத்திலேயே அந்தப் போராளிக் கவிஞனை அடையாளம் கண்டு கொண்டனர்.

▢

இமானுவெலின், உடல் இரும்பாக இருந்தது. மனசு கவிதையாக மலர்ந்து இருந்தது. மனித நேயமும் போர்க்குணமும் அவரது இயல்பான சுபாவத்தில் குவிந்திருந்தன.

அவரது மூத்த சகோதரர் ஜோஸ். எஃப். லக்கபா ஒரு கவிஞர் சிறுகதை ஆசிரியர் ஒரு முன்னாள் அரசியல் கைதியும் ஆவார். இலக்கிய நண்பர்கள் இவரை 'பெட்டே' என்று அழைத்தார்கள். அவர்கள் 'பெட்டேயின் சகோதரனே' என்று தன்னை விளித்தபோதெல்லாம் இமானுவெலுக்குத் தன் தனித்துவத்தை காப்பாற்றுதல் ஒரு பிரச்சினையானது.

சகோதரனின் நிழலில் ஒதுங்க அவர் விரும்பவில்லை. அடங்காத வேட்கையும், கற்பனைகளும், தன்னம்பிக்கையும், உணர்ச்சித் துடிப்பும் அவரது தனித்துவத்தை ஒவ்வொரு பொறியிலும் மேலும் மேலும் ஒளியேற்றின.

www.tamilarangam.net



ஆனாலும் இமானுக்கு பின்னால் வரும் கொரில்லா வீரர்களே! கவனமாக இருங்கள், ஈரமடைந்த உங்கள் உடைகளையும், காலணிகளையும் உலர்வதெற்கென்று உங்களின் மறைவிடத்திற்கு வெளியே போடாதீர்கள். அந்தத் தவறைச் செய்ததால்தான் இமானும் அவரது குழுவினரும் இறக்க நேரிட்டார்கள்.

இமானுவெல் எல்லோரிடமும் இம்மான் என்ற புதுப் பெயரில் தன்னை அடையாளம் காட்டிக் கொண்டார். உலகிற்குத் தன்னை யாரென்று காட்டும் நாளை எதிர்நோக்கி ஆர்வத்தோடு எழுத ஆரம்பித்தார். வருடங்கள் சில உருண்டோடியபோது அவரது புகழும் பெருகியது. அவர் யாவராலும் 'இமான்' என்று அழைக்கப்பட்டார்.

அறுபதுகளின் இறுதியிலும், எழுபதுகளின் தொடக்கத்திலும் இமான் பரிசுகளை வென்ற கவிஞராக, ஓவியராக, சிறுகதை எழுத்தாளராக, கல்லூரி ஆசிரியராகத் திகழ்ந்தார். நடிகராகவும், நாடகாசிரியராகவும் புகழ்ப் பெற்றார்.

தொடக்க காலத்தில் இமானின் கலை இலக்கிய பேராற்றல் 'சுத்தசுயம் பிரகாசத்தின்' வெளிப்பாடாகவே இருந்தது. நசிவு வாதத்தின் பிரதிநிதியாகவும் இருந்தார். அந்த நாட்களில் அவரது கவிதைகளில் தெளிவின்மை, இருண்மை, சாவைப் பற்றிய பயம், பெண்மையின் சாயல் இவைகளே ஆட்சி செய்தன.


ஆனால் விரைவிலேயே அவர் தனது வளர்ச்சியை விஷப் பூண்டாக மாற்றிய அந்த சீரழிவுச் சதுப்பின் போலிச் சுழலிலிருந்து தன்னைப் பிடுங்கிக்கொண்டு வெளியேறினார்.

வாழ்க்கையின் கொடூரமான, கசப்பான உண்மைகள் அநியாயத்திற்கும் அதர்மத்திற்கும் எதிராகக் குரலெழுப்ப அவரைத் தூண்டியது.

ஒரு சிலர் சுகபோகத்தில் புரள்வதற்காக ஏராளமானோர் வஞ்சிக்கப்பட்டு ஏழ்மையில் விரட்டப்படும் பேதநிலை இனியும் தொடர்வதா?— ஆவேசத்தின் கேள்வி இமானின் நெஞ்சிலும் எழுந்தது.

இயக்கமில்லாது ஜடத்தனத்தோடு கைகோர்த்துத் திரிந்த கடந்த காலத்தின் நினைவுகள் அவரை வருத்தின. இமான் புதிய கருத்துக்களுடன் இணைந்தார். உழைக்கும் மக்களின் தோழனாய், தொழிலாளர் வர்க்க போராட்டங்களில் பங்கு கொண்டார்.

தொழிலாளர் வர்க்கத்தோடு இமானுக்கு ஏற்பட்ட தொடர்பும் இணைப்பும் கவிஞன் என்ற அவரின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றியது. அவரது இலட்சியத்தின் எல்லைகளை விஸ்தரித்து உலக அளவில் விரிந்த தாக்கியது.



மானுடத்தின் மரண வேதனைக்கு எதிராகவும், ஆனந்த வாழ்விற்கு ஆதரவாகவும் தனது புரட்சிகரச் சிந்தனைகளை புகழ்ப் பெற்ற நாட்டுப் புறப் பாடல் வடிவங்களில் புகுத்தினார். அந்தப் பாடல்கள் இன்றும் மக்களால் பாடப்பட்டு வருகின்றன.

ஒரு கவிஞன் போராட்டத்திற்குத் தலைமையேற்கவும் அறிந்திருக்க வேண்டும் என்ற ஹோசிமின் வாக்கில் ஒளிரும் நிதர்சனத்தையும், துப்பாக்கிச் சனியன் புரட்சியின் நிகழ்ச்சி நிரலில் இருந்தே தீரும் என்ற லெனின் கூற்றில் இருக்கும் உண்மையையும் இமான் கண்டு கொண்டார்.

மேலும் 'தனக்கு முன்னே எழுந்துள்ள ஆயுதப் போராட்டத்தில் பங்கு கொள்ளாமல் இருக்க அவருக்கு உரிமை கிடையாது' என்பதையும் இமான் நன்றாக அறிந்திருந்தார். உடனே தன்னை பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் (CPP) கொரில்லா அமைப்பான 'புதிய மக்கள் படையில்' (NPA) இணைத்துக் கொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைக்கூலி மார்க்கோஸின் அராஜக ஆட்சிக்கு எதிரான யுத்தத்தில் செயலாற்றத் தொடங்கினார்.

சத்தியத்தை துப்பாக்கியாக ஏந்திய கவிஞர் இமான் புதிய மக்கள் படையில் சேர்ந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மார்ட்டின் தலைமையில் சாவு தங்களை நோக்கி முன்னேறி வருவதை அவர்கள் அறியாதிருந்தார்கள். அப்போது காலை ஆறுமணி முன்னிரவை கழித்த களைப்புடன் அனைவரும் காபி அருந்தியவாறே அவரவர் சிந்தனைகளில் ஆழ்ந்திருந்தார்கள்- ஒரு வேளை இமான் அந்த நேரத்தில் எழுதப் போகும் ஒரு கவிதையைப் பற்றி சிந்தித்துகொண்டிருந் திருக்கலாம்.

தன்னைப் பற்றி இப்படி சுய விமர்சனம் செய்துக்கொண்டார்:

''மூர்க்கமான அதே சமயம் கூச்ச சுபாவமுள்ள கவிஞனாக இருக்கும் நான், மக்கள் போராளியாகவும் ஆகியிருக்கிறேன். பேனாவால் கவிதைகள் எழுதும் என் கைகளில் எந்திரத் துப்பாக்கியையும் ஏந்தியிருக்கிறேன். இது ஒரு கலைஞனின் மரணத்தைக் குறிப்பதாகாது. அவனது கவித்துவத்தை குறைப்பதாகாது. மாறாக கவித்துவமும்போர்க்குணமும்சேர்ந்த கூட்டுக் கலவையாய் நான் ஒரு போராளிக் கவிஞனாக இருக்கிறேன்.''

புதிய மக்கள் படை (NPA) இமானின் கவிதைகள் பலவற்றின் ஊற்றுக்கண்ணாக விளங்கியது. இந்த நாட்களில் எழுதப் பட்ட 'மக்கள் போராளி' மற்றும் 'பிலிப்பைன்ஸ் கலைஞர்களுக்கு எழுதிய கடிதங்கள்' போன்ற கவிதைகளில் எளிமையும், தெளிவும், பரந்த மனித நேசமும், போராட்ட வாழ்வில் வீறிட்டு நிற்கும் உயிர்துடிப்பும் அவரில் எழுந்த சமூக உள்ளுணர்வும் சுடர்வதை நாம் காண்கிறோம்.

'யுத்தகளம், ரத்தமும் கண்ணீரும் நிறைந்தது, அதில் யார் சகவீரர்களின் துயரச் சுமைகளைப் பகிர்ந்து கொள்கிறானோ, யார் மகத்தான எதிர் காலத்திற்கான கடமைகளுக்காகத் தன் உயிரைப் பணயம் வைக்கிறானோ, யார் விடா முயற்சியோடும் உத்வேகத்தோடும் கிழக்குத் திசையில் முன்னேறிச் செல்கிறானோ அவனே மகிழ்ச்சிக்கான நிஜமான போர் வீரன். அவனே விடுதலைக்காக ஆயுத மேந்திய அனைவராலும் விரும்பப்படுகிறவன் ஆவான் என்றார் வோர்ட்ஸ்வெர்த். இந்த உருவ அணி பூண்ட போர்வீரனாய் இமான் திகழ்ந்தார்.

கஷ்டங்கள் நிறைந்த தன் கொரில்லா வாழ்க்கையைப் பற்றியதான டைரியை இமான் சிகரெட் பாக்கெட்டின் தகர அட்டைகளில் பொறித்துவைத்தார். தனது நண்பர் ஒருவருக்கு அவர் வரைந்த கடிதத்தில் இப்படியொரு வாசகம் இருந்தது: ''ஆபத்தோடான நெருக்கத்தால் எங்களின் பிரக்ஞை எக்கணமும் விழிப் போடிருக்கிறது''

ஆனாலும் இமானுக்கு பின்னால் வரும் கொரில்லா வீரர்களே! கவனமாக இருங்கள். ஈரமடைந்த உங்கள் உடைகளையும், காலணிகளையும் உலர்வதெற்கென்று உங்களின் மறைவிடத்திற்கு வெளியே போடாதீர்கள். அந்தத் தவறை செய்ததால்தான் இமானும் அவரது குழுவினரும் இறக்க நேரிட்டார்கள்.

1976— மார்ச் மாதம் பதினெட்டாம் தேதி. அப்போது இமான் டவா-டெல்-நார்டே என்ற இடத்திலிருந்தார். அங்கேதான் சாவு அவரை சந்தித்தது.

மக்களின் எழுச்சி துப்பாக்கி முனையில் அடக்கி ஒடுக்கப்பட்ட காலமது. பிலிப்பைன்ஸ்அரசின் ராணுவக் கொலையாளிகள்— இமானின் வார்த்தையிலேயே சொல்வதானால்— 'மரணத்தின் தூதுவர்களாய்' கொரில்லாப் போராளிகளை நோக்கி முன்னேறிய தருணமது.

அப்போதுதான் இமானைத் தெரிந்த கொரில்லா வீரன் மார்ட்டின் என்பவன் அரசின் கொலைகார ராணுவத்தினரிடம் சிக்கிக் கொண்டான். அவர்கள் அவனை துப்பாக்கி முனையில் மிரட்டினார்கள்; அரட்டினார்கள்; வெருட்டினார்கள். இறுதியில் இமானுடைய குழுவினர் இருக்குமிடத்தை காட்டினால் அவனுக்கு உயிர்ப்பிச்சை அளிப்பதாக வாக்களித்தார்கள்.

உயிருக்கு அஞ்சி ஆனால் துரோகத்திற்கு இசைந்த மார்ட்டின் ராணுவத்தினரை வழக்கமாக இமான் தங்கும் ரகசிய இடங்களை நோக்கி வழிநடத்தினான்.

ஆனால் மார்ட்டினால் கூட அனுமானிக்க முடியாத ரகசிய இடத்தில் இமான் தங்கியிருந்தார். அது ஒரு விவசாயியினுடைய வீடு. இமானோடு இன்னும் மூவர் இருந்தார்கள். அவர்களில் பதினெட்டே வயதான கர்ப்பிணியான பெண் போராளியும் ஒருவர்.

மார்ட்டின் தலைமையில் சாவு தங்களை நோக்கி முன்னேறி வருவதை அவர்கள் அறியா

www.tamilarangam.net



இமான் இறந்தார். வாழ்ந்த போது அவர் தன்னை 'மரணத்தின் குழந்தை' என்று வர்ணித்துக் கொண்டார். ஆனால் இறக்கும் வரை வாழ்வை நேசித்தார். 'மரணத்தின் வழியே புதிய வாழ்க்கைக்கு மனிதகுலத்தை அழைத்துச் செல்கிற மக்கள் போராளியாக இறந்தார்.

திருந்தார்கள். அப்போது காலை ஆறுமணி முன்னிரவை கழித்த களைப்புடன் அனைவரும் காபி அருந்தியவாறே அவரவர் சிந்தனைகளில் ஆழ்ந்திருந்தார்கள். ஒருவேளை இமான் அந்த நேரத்தில் எழுதப் போகும் ஒரு கவிதையைப் பற்றி சிந்தித்து கொண்டிருந்திருக்கலாம்.

பூட்சுகால்கள் சமீபிப்பதைப் போல் சடசடத்தன. தங்களின் எல்லைக்குள் ராணுவத்தினர் வந்து கொண்டிருப்பதை அறிந்த பிறகும் அது அவர்களின் வழக்கமான ரோந்து; இந்த இடம் யாருக்குமே தெரியாது என்ற நம்பிக்கையில் ஆயுதங்களோடு தயார் நிலையில் இருக்கவும் தோன்றாமல் அவர்கள் அமைதியாய் அமர்ந்திருந்தார்கள்.

ஆனால் அவர்களின் தவறுக்குரிய சாட்சியங்களாக உடைகளும், காலணிகளும் வீட்டிற்கு வெளியே உலர்ந்து கொண்டிருந்தன. அவற்றைக் கண்டதும் மார்ட்டின் தன் கேடு கெட்ட வாயைத் திறந்தான். "இதோ அவர்களின் உடைகள். இந்த வீட்டில்தான் அவர்கள்இருக்கிறார்கள்"

அவ்வளவுதான். சற்றும் தயங்காமல் ராணுவக்கும்பலின் ரத்தபசி கொண்ட எந்திரத் துப்பாக்கிகளிலிருந்து குண்டுகள் சரமாரியாக காற்றைக் கிழித்துக் கொண்டு பாய்ந்தன. அந்த வீடே துளைப்பட்டு சல்லடைக் கண்களானது. இறுதியில் ராணுவத்தினர் சுடுவதை நிறுத்திய போது இமானும் கர்ப்பிணியான பெண் போராளியும் ரத்தக் காயங்களுடன் உயிர்மிஞ்சியிருந்தார்கள்.

பிறகு அவர்கள் டகாமிற்கு கொண்டுச் செல்லப் பட்டார்கள், ஒருத்தரையும் உயிரோடு விடக் கூடாது என்று ராணுவ சார்ஜென்ட் நாயாய் குரைத்தான். முதலில் அந்த பெண் போராளி சுட்டுக் கொல்லப் பட்டார். கர்ப்பத்திலிருந்த குழந்தைக்கு அவளின் வயிறே சமாதியானது. அடுத்து சார்ஜென்ட் புரூட்டஸின் வாரிசான மார்ட்டினிடம் ஒரு துப்பாக்கியைத் தந்து 'இமானைக் கொல்ல ஆணையிட்டான்.

உள்மனம் உறுத்த மார்ட்டின் சுட கைகளற்று நின்றான். மரணத்தின் வாசலில் நின்ற அந்த இறுதி நேரத்திலும் மரணத்திற்கப்பாற்பட்டு மக்கள் படையின் பிரதிநிதியாய் இமான் துணிவும் உறுதியும் தொனிக்க கூறினார்: சுடு, மார்ட்டின், என்னை முடி.

மார்ட்டின் தகர்ந்தான். இமானின் வாய்க்குள் துப்பாக்கி முனையை அமுத்திச் சுட்டான். இமானது கபாலத்தின் பின்புறம் வெடித்துக் சிதறியது. இமான் கீழே விழுந்த பிறகும் மார்ட்டின் சுட்டான். இந்த முறை குண்டு இமானின் நெஞ்சில் பாய்ந்தது.

இமான் இறந்தார். வாழ்ந்த போது அவர் தன்னை 'மரணத்தின் குழந்தை' என்று வர்ணித்துக் கொண்டார். ஆனால் இறக்கும் வரை வாழ்வை நேசித்தார். 'மரணத்தின் வழியே புதிய வாழ்க்கைக்கு' மனிதகுலத்தை அழைத்துச் செல்கிற மக்கள் போராளியாக இறந்தார்.

இப்பொழுது இமான் இறந்து பத்து ஆண்டுகளுக்கு மேலாகி விட்டன. இன்றும் நாம் வாழ்வின் சௌந்தர்யங்களை நினைக்கும் போதெல்லாம் மானுட விடுதலையைத் துப்பாக்கியால் இசைந்த அந்தப் போராளிக் கவிஞனையும் நினைவுகூர்கிறோம். அவன் ஓர் இனிய கனவு. மரணமே இல்லாத விடுதலைக் கனவு. அந்தக் கனவை மிகவும் நெருக்கத்தில் காண நாம் செல்வோம்.

ஜே. சாந்தாராம்

## அடுத்த இதழில்

இன்றைக்கு புதிய புதிய பத்திரிகைகள். வந்து கொண்டிருக்கும் போதே மறந்து விட வைக்கும் பத்திரிகைகள் பல. ஆனால் காலத் திரைகளையும் மீறி கவனத்தில் பதிந்த பத்திரிகைகள் பல. அந்த நின்று போன பத்திரிகைகளைப் பற்றிய அறிமுகத்தை அடுத்த இதழ் முதல் 'பாலசூரியன்' தொடர்ந்து தர இருக்கிறார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'நந்தன் கதை'

## வெள்ளைச் சட்டைக் காரர்களுக்கும் விமர்சகர்களுக்குமான நாடகமல்ல

தேசிய அங்கீகாரம் பெற்ற ஒரு நாடக ஆசியரையோ, ஒரு நாடக இயக்குநரையோ தமிழகம் தோற்றுவிக்கவில்லை' என்று உலக நாடகக் கலைக் களஞ்சியம் குறைக் கூறுகிறது. (Encyclopaedia world drama, vol: III (19/5 P. 41)

தமிழகத்தில் நாடகம் பற்றிய சரியான எண்ணம் கொண்ட யாரும் இதை மறுக்காமல் ஒத்துக் கொள்ளும் இந்த நாளில், ஒரு இளம் தளிர் நந்தன் கதையாக' இதோ நான் இருக்கிறேன்' என்று உருவாகியுள்ளது.

''இது நந்தன் கதைதான்; நந்தனர் கதை அல்ல 'ஆர்' என்ற சிறப்பு விகுதிக்காக 'பார்ப்பானுடைய கைதட்டல் பெறுவதற்காக, நெருப்பில் எரிந்துபோன சோகக் கதையைச் சொல்லுகிறது இந்த நாடகம். 'பார்ப்பான்' என்று ஒரு குறிப்பிட்ட சாதியைக் கூறவில்லை. சமூகத்தில் ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்று நினைக்கிறவன் எவனுயிருந்தாலும் அவன் 'பார்ப்பான்' என்று நாடகத்தின் மூல ஆசிரியர் இந்திராபார்த்தசாரதி தன் முன்னுரையில் கூறியுள்ளார்.

மேலும், இது படிப்பதற்கான நாடகமல்ல; மேடைக்கென்றே எழுதியது. எந்த நூற்ருண்டில் மேடையேறினுலும் அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை' என்று அவர் எட்டு வருடத்திற்கு முன் கூறியுள்ளார். இன்று அந்த நாடகம் அதன் எந்தப் பரிமாணமும் கெடாமல், வெள்ளைச் சட்டைக்காரர்களுக்கும், விமர்சகர்களுக்குமான நாடகமாக இல்லாமல் தமிழ்த் தெரிந்தவர் மட்டுமல்ல, கண்ணுல் பார்க்கக் கூடிய எவரையும் சென்றடையக் கூடிய நாடகப் பாங்குடன் இயக்கப்பட்டுள்ளது.

'இது தாங்க எங்க பறச்சேரி' - என்ற நந்தனின் அறிமுகத்தோடு நாடக மேடை, சேரியாகிறது. கள்ளு குடிப்பதும், கூத்தடிப்பதும், கோபப்படுவதும், ஆசைப்படுவதும், அடிபடுவதும், வீரமாய் சண்டைப்போடுவதுமாய்க் காட்சி கரைகிறது. நந்தனு தெரிகிருன். அளகை ரசிக்கத் தெரியாத இந்த ஜனங்களை எண்ணி வேதனைப்படுகிருன், அழகா? ஆமாம், அழகு! நந்தன் அன்று கண்டானே, திருப்புன் கூர் கோவிலில் நடனமாடிய தாசி அபிராமி, அவள் அளகு! அந்தக் கோவில் அளகு! பாப்பாரச்சாமி அளகு!

'கையிலே கலயம்
காலிலே சேறு
பையிலே பாக்கு' -

என்று கிராமிய நயத்தில் பாடல் வருகிறது. சேறு பண்ணி பரம்படித்து, விதை தெளித்து, நாத்து பறித்து, நடவுநட்டு மடைதிறந்து, கதிரறுத்து, கொம்பு முழங்கி ஆட்டம் ஆடுகின்றனர். மாடு, பறையன் என்று வித்தியாசமில்லாமல் இருக்கின்ற இவர்களிடம், கோவிலுக்குள்போகலாம் மாடு ஆனு நாம்? என்று கேள்விகளை எழுப்புகிருன் நந்தன். பாப்பாரச் சாமியை பார்க்கணுமென்ருல் சும்மாவா, நந்தன் பஜனை செய்து, சாமி கும்பிட ஆரம்பிக்கிருன்.

'அழுக்குச் சாமி வேணும், அளகுச் சாமி வேணும்'னு புறப்பட்ட நந்தனைக் கண்டு 'மாடு தின்னும் புலையனுக்கு,, மார்கழித் திருநாளா' - என்று வெகுண்டெழுகின்றனர் வேதியர்களும், மேல்சாதிக்காரர்களும். 'ஒரு நந்தனை அடக்கிப் போட்டா ஒன்பது நந்தன் கிளம்புவான் என்ற முன்ஜாக்கிரதையுடன், நந்தனை அழிப்பதற்காக, அவனையே தெய்வ அனுகூலம் உள்ளவனுக ஒத்துக்கொள்கின்றனர். கனவில் கடவுள் கூறியதாக கூறி, அசரீரியாக ஒலித்து நந்தனுக்கு மரியாதை கொடுத்து, கோவில் தாசி அபிராமியை பரிசாக அளிக்கின்றனர்.

தென்னிந்தியாவில், சிறந்த நாடகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, டெல்லியில் தேசீய கலைவிழாவில் கலந்து கொள்ள இருக்கும் இந்த நாடகம், காந்திகிராமம் 'தளிர்' அரங்கிற்காக, மத்திய சங்கீத நாடக அகாடமி உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

www.tamilarangam.net



நந்தன் அளகு, அளகு! என்று சொல்ல, 'காத்துல ஆடுற நெல்லு கண்ணுக்கு அளகாயில்லையா?' என்று ஜனங்கள் கேட்கிறார்கள். எது அழகுண்ணு பாமரகலைக்கும் - சாஸ்திரிய கலைக்கும் போட்டி நடத்தி மேல்சாதிக்காரர்கள் நடுவர்களாய் இருந்து சாதகமாய்த் தீர்ப்பளிக்கின்றனர். இப்படி நந்தனுக்கு ஆதரவாய்த் 'தெய்வ கடாட்சம்' இருக்க, கடவுள் வேதியர் கனவில் வந்து 'நந்தனை ஜோதியில் கலக்க அழைக்கிறார்.

நந்தனின் ஆண்டை அறுவடை முடித்துதான் போக வேண்டுமென்று சொல்கிறார். குழம்பியிருக்கும் நந்தனை, பூஜை செய்தால் எல்லாம் சரியாகுமென்று வேதியர் கூற, நந்தன் பரிவாரங்களுடன் பஜனை செய்ய, வேதியர் ஏற்பாட்டில் ஆட்கள் அறுவடை செய்து முடிக்கின்றனர். பஜனை செய்யும் நந்தனிடம் அதிசயத்தை கூறி பெரிய மனிதர்கள் காலில் விழுந்து வணங்கி, ஒரு வழியாக தில்லைக்கு அவனையும் அவனது பரிவாரங்களையும் அனுப்பிவைக்கின்றனர்.

ஜோதியாய் எரியும் பாழாய்ப் போன நெருப்பு - நந்தன், அபிராமி, அவனது ஜனங்களை தன் கொடூர நாக்கால் தீண்டுகிறது. 'நந்தனார்' ஆனதை கண்டு மகிழ்ச்சி ஆரவாரமிடும் வேதியர் - மேல்சாதிக்காரர்கள், 'இன்னும் பாரப்பானாய் போகனுங்கிற பறையங்க யாரு?' ன்னு கொக்கரிக்கின்றனர்.

தலைவிரி கோலமாய் ஒரு பெண் வருகிறாள். யுத்த கதியில் பறைக் கொட்ட, அந்த ஜனங்களின் எழுச்சி வடிவமாய் மேல்சாதிக்காரர்களை நோக்கிப் போகிறாள். குதூகலமும், கொண்டாட்டமும், கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கி, மேடை முழுவதுமாய் அந்தப் பெண்ணின் கோப உருவமே பட நாடகம் முடிகிறது.

தென்னிந்தியாவில், சிறந்த நாடகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, டெல்லியில் தேசீய கலைவிழாவில் கலந்துகொள்ள இருக்கும் இந்த நாடகம், காந்திகிராமம் 'தளிர்', அரங்கிற்காக, மத்திய சங்கீத நாடக அகடாமி உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

நாடகத்தை திறம்பட இயக்கியுள்ள இயக்குநர் இரா. இராசு, தற்போது தஞ்சை தமிழ் பல்கலைக் கழகத்தில் நாடகத்துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். 'மனுசனை மனுசனாய் நினைக்கனும்' என்று சொல்லும் இவர், கேரள நாடக உலகில் மாற்றத்தை நிகழ்த்தியுள்ள சங்கரன் பிள்ளை போன்று — தமிழ்நாடக உலகை ஏற்படுத்த முனைந்துள்ள S.P. சீனிவாசன், ராமானுஜம், மு. ராமசாமி, ந. முத்துசாமி என்கிற வரிசையில் தன்னை இந்த நாடகம் மூலமாக இனம்காட்டியுள்ளார்.

பாமர கலாச்சாரத்தை கவளப்படுத்தும் கலைஞர்களையும், சாஸ்திரிய சங்கீதத்தை வெளிப்படுத்தும் கலைஞர்களையும் நாடகத்தில் பாத்திரமாக்கி இசையும், நடனமும், ஆட்டமும் நடிப்புமாய் வாழ்க்கைச் சித்திரத்தை கண்முன் தீட்டும் குழுநேர்த்தியுடன் உருவாகியுள்ளது 'நந்தன் கதை'!

இதுவரை கலைவிழா சம்பந்தப்பட்ட அரங்குகளில் மட்டுமே நடிக்கப்பட்டுள்ள இந்த நாடகம், பல்வேறு அமைப்புகள் மூலமாக மக்களைச் சென்று அடையும் போது, சமூக ஏற்றத் தாழ்வுகளை பறைசாற்றும் என்பது மட்டுமல்ல, நாடகத்திற்கும் - மக்களுக்குமுள்ள இடைவெளியை குறைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

—செல்வா

## பாலம் வாசகர்கள் கவனத்திற்கு

'பாலம்' இதழுக்குச் சந்தா செலுத்தியவர்கள் முகவரி மாறும் போது 'மாறிய முகவரியை' உடனுக்குடன் தெரியப் படுத்தி உதவுங்கள்.

பணம் அனுப்புகின்றவர்கள் பணவிடைத் தாளின் (M.O. Form) கிழிப்பத்தில் தமது முகவரியை மறவாது எழுதுங்கள்.

சிறுகதை, விமர்சனம், பேட்டிக் கட்டுரை, கவிதை, மொழி பெயர்ப்பு ஆகிய படைப்புகளை வாசகர்களிடமிருந்து வரவேற்கின்றோம்.

ஈழ நண்பர் கழக, நண்பர்கள் சந்தா, நன்கொடை சேர்த்து அனுப்புதல் மூலம் ''பாலம்'' இதழைப் பலப்படுத்துங்கள்,

'பாலம்' இதழுக்கு ஆண்டுச் சந்தா ரூ. 20 மட்டுமே. சந்தாவும், நன்கொடையும் படைப்புகளும் அனுப்ப வேண்டிய முகவரி:

பாலம், மாத இதழ்,
த. பெ. எண்: 39, மதுரை-2.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழத்தமிழ்ச் சமுதாயத்தில் சாதியத்திற்கெதிரான போராட்டம்

□

# சாதி வெறியர்கள் 15பாடசாலைகளை தீக்கிரையாக்கினர்

யாழ்ப்பாண மாணவ மகாநாட்டினர், இந்து வித்தியா விருத்திச் சங்க இராசரத்தினம், பேராசிரியர் சுந்தரலிங்கம் போன்றோரைத் தவிர ஏனையோர் இப்பிரமாணங்களைக் கடுமையாக எதிர்த்தனர். பாடசாலை முகாமையாளர்கள், ஆசிரியர்கள், ஆகியோரும், கிராமச் சங்கங்களும் தமது எதிர்ப்பைத் தெரிவித்தன. இப்பிரமாணம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி மாணவர்களாயிருந்த பிராமணர் இருவர் ஏனையோருடன் சமபோசனம் வைக்க வேண்டிய நிலைக்குட்படுத்தியதால் அதனைத்தளர்த்தும்படி சேர். பொன். இராமநாதன் தலைமையிலான குழுவொன்று தேசாதிபதியைச் சந்தித்து உரையாடியது. [21] கல்விப்பணிப்பாளர் இவ்விரண்டு பிராமணர் விடயத்தில் சலுகை காட்டினர். [22] கிராமப் புறங்களிலுள்ள விவசாயிகளில் எழுபத்தைந்து வீதத்துக்கு மேற்பட்டோர் இப்பிரமாணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் கிராமப்புறங்களில் இவ்வாணையை அமுல் நடத்த வேண்டாமென நகர்ப்புற பாடசாலை முகாமையாளர்கள் அரசாங்க அதிபரைக் கோரினர். [23]

பேராசிரியர் சுந்தரலிங்கம் சம ஆசனத் திற்காதாரமாக யாழ்ப்பாணம் விவேகாநந்த சபையில் பேசிய பொழுது கூட்டத்தில் குழப்ப மேற்பட்டு கூட்டம் வன்முறைச் சம்பவங்களுக்கு இடங்கொடுத்து விடுமென்ற அச்சத்தால் இடை நிறுத்தப்பட்டது. [24] தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் தாழ்ந்த சாதியினரை அனுமதிப்பது சம்பந்தமாகவும், சரி ஆசனம் கொடுப்பது பற்றியும் கல்விப் பணிப்பாளர் உறுதியாக இருந்ததினால் இதில் தலையிடுமாறு பேராசிரியர் சுந்தரலிங்கத்தை உயர் சாதியினர் கேட்டனர். அரசாங்கத்திற்குத் தாழ்ந்த சாதியினரும் உயர்ந்த சாதியினர் போல் நல்ல பணம் வழங்கி இருப்பதால் இப்பாடசாலைகளுக்குத் தாழ்ந்த சாதியினர் பிள்ளைகளை அனுப்புவதில் தவறில்லை என வாதிட்டார். அத்துடன் ஏற்கனவே படித்து வந்த பிள்ளைகளைப் பாடசாலைக்கனுப்பாது விட்டால் வழக்குத் தொடருவேன் எனவும் எச்சரிக்கை செய்தார். பின்னர் மாவிட்டபுரம் திருவிழா ஒன்றிற்கு இத்தாழ்ந்த சாதிப் பிள்ளைகளும் பணஉதவி புரிந்தனர். [25] இச்சந்தர்ப்பத்தில் தீர்க்கமான முடிவொன்றினை மக்களுக்கு இதுபற்றி வழங்க வேண்டுமெனப் பத்திரிகையாளர்களும், தனிப்பட்டவர்களும், சேர். பொன். இராமநாதனைக் கோரினர். இராமநாதனவர்கள் ஏலவே தாழ்ந்த சாதியினரது கல்வி வளர்ச்சியில் முக்கிய கவனம் எடுத்தல் வேண்டுமென இந்து வித்தியா விருத்திச் சங்க ஆசிரியர்களைக் கேட்டிருந்தனர். ''சில தாழ்ந்த சாதிப் பிள்ளைகள் தங்கள் பாடசாலைக்கு வரவிரும்பும் தங்களுக்கு அது பிரியவீனத்தையும் தொந்தரவையு முண்டாக்குமோ என்னும் பயத்தினால் அப்பிள்ளைகள் பின்னிற்கின்றனர். தாங்கள் அவ்வித பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளவும் அவர்களுக்குச் சம ஆசனம் கொடுக்கவும் சம்மதித்தால், இங்குள்ளவர் யாவரும் வித்தியா பகுதிப் பிரமாணத்தின் படி தாழ்ந்த சாதியாரோடு சம ஆசனத்திலுட்காரப் பின்னிட மாட்டார்கள்''. [26] சேர். பொன். இராமநாதன் பகிரங்க அறிக்கை எதுவும் விடுத்ததாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணத்தவர் சிலர் குடியேற்ற நாட்டுக்காரியதரிசிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி சாதிமுறை பற்றி ஆராய ஆணைக்குழுவொன்றும், தாழ்ந்த சாதியினரது பொருளாதார நிலையை விசாரிக்கக் குழுவொன்றும் நியமிக்கவேண்டுமெனக் கோரினர். அத்துடன் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் சம ஆசனம் வழங்குவதற்கும் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். சம ஆசனவிடயத்தில் தான் தலையிட வேண்டிய அவசியம் எதுவுமில்லை எனவும், கோரப்பட்ட ஆணைக்குழுக்கள் தேவையற்றதெனவும் குடியேற்ற நாட்டுக் காரியதரிசி பதில் அனுப்பினர். [27] எனினும் யாழ்ப்பாணம் இந்து வித்தியா விருத்திச் சங்கம் தனது பாடசாலைகளில் சம ஆசனம் அளிக்கவும், இவ்விடயத்தில் அரசாங்கத்துக்கு ஒத்தாசை நல்கவும் தனது உடன்பாட்டைத் தெரிவித்தது. [28] எதிர்ப்புகளுக்கு அரசாங்கம் செவி சாய்க்காததால் சினங்கொண்ட சாதியபிமானிகள் பதினைந்து பாடசாலைகளைத் தீக்கிரையாக்கினர். [29] துன்னாலை, புத்தூர், உரும்பராய் போன்ற இடங்களில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களைத் தடுப்

க. அருமைநாயகம்

சென்ற இதழ் தொடர்ச்சி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பதற்காக பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவுகள் தாபிக்கப்பட்டன. உயர் சாதியினரது பய முறுத்தல்களால் தாழ்ந்த சாதியினர் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பவில்லை. வேளாளரும் கல்விப் பணிப்பாளரது பிரமாணத் திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகத் தமது பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுப்பவில்லை. இதனால் ஏழாலை, கோப்பாய் தவிர்ந்த ஏனைய கிராமங்களில் பாடசாலைகள் ஒழுங்காக நடை பெறவில்லை. வேறு சிலர் அரசாங்க உதவி நன்கொடை பெருத பாடசாலைகளைத் தாபித்து நடத்தினர். 1930 இல் அரசாங்கம் நன் கொடை பெருத பன்னிரண்டு பாடசாலைகளுக்கு அங்கீகாரம் வழங்கியது. இவ்வாண்டுகளில் பாடசாலைகள் ஒழுங்காக நடைபெறவில்லை, என்பதற்கு எடுத்துக்காட்டாக பிள்ளைகளது பாடசாலை வரவு ஒழுங்கீனம் சம்பந்தமாகத் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையிலி ருந்து அறிந்துகொள்ளலாம். 1929ஆம், 1930ஆம், 1931ஆம், 1932ஆம் ஆண்டுகளில் முறையே 5376, 9447, 8098, 14286 வழக்கு கள் தொடரப்பட்டன.[30] கல்விப்பணிப்பாளரது பிரமாணத்துக்கு எதிராக மக்கள் காட்டிய எதிர்ப்பும், பயமுறுத்தல்களுமே இப்பெருந் தொகை வழக்குகளுக்குப் பிரதான காரணம் என வடமாகாண அரசாங்க அதிபர்கள் தமது அறிக்கைகளில் சுட்டிக்காட்டியுள்ளனர்.[31] வழக்குத் தொடரப்படும் எனத்தெரிந்திருந்தும் பாடசாலைக்கு வராதோரின் எண்ணிக்கை அதி கரித்ததிற்குரிய பொறுப்பு குற்றவாளிகளுக்கு கிராமச்சங்கங்கள் காட்டிய ஆதரவாகும். கிராமச் சங்கங்கள் தாமே சம ஆசனத்துக் கெதிராக இருந்த காரணத்தினல் இவ்வழக்குகளில் அவ் வளவு உற்சாகம் காட்டவில்லை. இதனலேயே பாடசாலை வழக்குகளை பொலிஸ் நீதிமன்றத் திற்கு மாற்றக்கூடிய சட்டத் திருத்தமொன்று அவசியமென அரசாங்க அதிபரொருவர் அர சாங்கத்திற்குச் சிபாரிசு செய்தார். அரசாங்கம் தனது கொள்கையைத் தீவிரமாகக் கடைப் பிடித்த போதிலும் பாடசாலை முகாமையாளர் களும், கிராம பொலீஸ் விதானைமாரும்,[32] தொடர்ந்து தாழ்ந்த சாதியினரைப் பயமுறுத் திக் கொண்டிருந்தனர். இத்தகைய பயமுறுத் தலினல் சிறுப்பிட்டியிலுள்ள அரசாங்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை தனது பதிவை இழந்தது. உதவி நன்கொடை பெறுவதற் காகப் பாடசாலைகள் மாணவரிடையே பார பட்சம் காட்டப்படுவதில்லை என்ற உறுதிப் பத்திரத்தை அரசாங்கத்திற்குக் கொடுத்தாலும் நாலாம் ஐந்தாம் தசாப்தம் வரையும் சில பாடசாலைகள் ஹரிஜனப் பிள்ளைகளுக்கு அனு மதி வழங்கவில்லை. அக்காலப் பாடசாலை முகாமையாளரது மனப்பாங்கிற்கு எடுத்துக் காட்டாக ஹண்டி பேரின்பநாயகம் விபரித்த நிகழ்ச்சியொன்று இதற்குச் சான்று பகர் கின்றது.[33] 1944ஆம் ஆண்டு ஸ்கந்தவரோத யக் கல்லூரியின் அதிபர் பதவிக்கு நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின்போது அக்கல்லூரியின் முகாமையாளர் திரு. ஸி. சுப்பிரமணியத்திடம் தெரிந்து கொள்ள விருப்பிய பிரதான விடயம் அவர் பாடசாலையில் ஹரிஜனப் பிள்ளைகளுக்கு இடமளிப்பாரா என்பதுதான்.[34] கிறிஸ்தவப் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளில் பெரும்பாலும் இரண்டாம் மகாயுத்தம் முடி வுற்ற பின்னரேயே ஹரிஜனப் பிள்ளைகளுக்குப் படிக்கும் வாய்ப்பேற்பட்டது.

பாடசாலைகளில் மாத்திரமின்றி பஸ்களி லும், வாடகைக் கார்களிலும் ஆசன வசதி கிடைக்காததால் யாழ்ப்பாண ஒடுக்கப்பட்ட தமிழர் சேவைச் சங்கத்தை (Jaffana Depressed Tamil Service League) சேர்ந்தவர்கள், வாடகை வாகனங்களில் தமக்கு சம ஆசன வசதி செய்துதர வேண்டுமென வடமாகாண அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத் தனர்.[35] இவர்களுடைய கிளர்ச்சியினல் வேளாள பஸ் சாரதிகள் 1933 ஆம் ஆண்டில் வேலை நிறுத்தம் செய்தனர்.[36]

## வாலிப மகாநாடு (Youth Congress)

சாதிப்பிரச்சினைகள் 1930ஆம் ஆண்டளவில் உயிரூட்டம் பெற உழைத்த சக்திகளில் யாழ்ப் பான வாலிபர் மகா நாட்டினர் சிறப்பிடம் வகிக்கின்றனர். இலங்கை வரலாற்றில் இது வரை இவ் யாழ்ப்பாண வாலிப மகாநாட்டி னரது தொண்டு பற்றி விரிவான ஆய்வுகள் நடாத்தப் பெருததால், அவர்களது பங்களிப்பு வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற முடிய வில்லை.[37] இந்திய தேசியக் காங்கிரசின் கொள்கைகளைக், குறிப்பாக காந்தி காலத் தத்துவத்தை முன்னேடியாகக் கொண்டு இலங் கையில் தோன்றிய இயக்கங்களில் யாழ்ப்பாண வாலிபர் மகாநாட்டினர் முதலிடம் வகிக்கின் றனர். இலங்கை அரசியல் வளர்ச்சியிலும் இது பிரதிபலிக்கக் காணலாம். வாலிப மகா நாட்டினர் இலங்கையின் அரசியல் சமுதாயப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் காந்திய வழி யையே பின் பற்றினர். தேசிய ஐக்கியம், பூரண சுயராச்சியம், சாதி வேற்றுமையை ஒழித்தல், சீதனம் ஒழித்தல் வெளிநாட்டுப் பொருட்களைப் பகிஷ்கரித்து உள்நாட்டு உற் பத்திகளை உபயோகித்தல் போன்றவற்றை இலங்கையிலும் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் நடைமுறைப் படுத்த விரும்பினர். அதற்கான நடவடிக்கைகளையும் எடுத்தனர். ''மாணவர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மகா நாடாக'' (Student Congress) இவ்வாலிபர் மகாநாடு தோன்றிய (1924) காலத்திலேயே சாதிமுறை ஒழிக்கப்படல் வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தனர். [38] பின்னர் பொதுமேடைகளில் சமுதாய விழிப்புணர்ச்சிபற்றிப் பேசிய பழைய தலைமுறையின் தலைவர்களைப் போலன்றித் தாம் பிரச்சாரம் செய்ததைப் பலரினது எதிர்ப்பின் மத்தியிலும் செயற்படுத்தவும் விழைந்தனர். சகல கிராமங்களுக்கும் சென்று - சாதி வேறுபாடுகள் பாராட்டாமல் தமது கொள்கைகளைப் பிரசாரம் செய்தனர். இத்தகைய பிரச்சாரமுறை இளைஞர்களை வெகுவாகக் கவர்ந்தது. அத்துடன் காந்தியையும், அவரது தத்துவத்தில் நம்பிக்கையுடன் உழைத்தவர்களும், இந்தியத் தேசிய காங்கிரசின் பெருந்தூண்களாக விளங்கிய எஸ். சத்தியமூர்த்தி, இராஜகோபாலாச்சாரியார், சரோஜினி தேவி, கமலாதேவி சட்டோபாத்தியாய, ஜவஹர்லால் நேரு, திரு. வி. கல்யாண சுந்தரமுதலியார், போன்றவர்களை வரவழைத்து சமூகச் சீர்கேடுகள் களைந்தெறிய வேண்டிய அவசியத்தைப் பற்றி மக்களுக்கு எடுத்தோதச் செய்தனர். சிறப்பாக காந்தியின் ஹரிஜனர் பற்றிய சொற்பொழிவுகளுக்குப் [39] அ. பின்னர் பல பாடசாலைகளில் ஹரிஜனப்பிள்ளைகளுக்கு அனுமதி கிடைத்தது. [39] ஆ.

வாலிப மகாநாட்டினர் தமது வருடாந்தர மகாநாடுகளின் போது தாழ்ந்த சாதி மக்களையும் தம்முடன் சேர்த்து மகாநாட்டு மண்டபங்களில் ஆசனம் கொடுத்தனர். மல்லாகத்தைச் சேர்ந்த மூத்தவி, இளையவி, தெல்லிப்பழையைச் சேர்ந்த யோ. போல் போன்ற தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவர்கள் வாலிப மகாநாட்டினருடன் ஒத்துழைத்தவர்களில் சிலராவர். இக்காரணத்தினுல் தமது மகாநாடுகளைத் கீரிமலை வைத்திலிங்கம் மடத்தில் நடத்துவதை விடுத்துக் காங்கேசன் துறை தெல்லிப்பழை, திருநெல்வேலி போன்ற இடங்களில் நடத்த வேண்டியிருந்தது. தாழ்ந்த சாதியினரை மகாநாட்டு மண்டபங்களில் சேர்த்துக் கொண்டதின் விளைவாக மகாநாட்டு மண்டபங்கள் உயர் சாதிக்காரர்களினுல் தீக்கிரையாக்கப்பட்டன. இவைகளிலும் பார்க்க வாலிப மகாநாட்டினர் அறிமுகப்படுத்திய ''சமபந்தி போசனக்'' கூட்டங்கள் பெரும் வன்முறைச் சம்பவங்களுக்கு வழிகோலக் கூடிய வகையிலமைந்தது. உதாரணமாக 1930 ஆம் ஆண்டு திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவிருந்த மகாநாட்டின் போது ஹரிஜனர்களை மகாநாட்டு மண்டபத்தில் அனுமதிப்பதோடமையாது அவர்களுடன் சமபந்தி போசனம் செய்யவும் திட்டமிடப் பட்டிருந்தது. இதனைத் தடுக்க முனைந்த சாதியபிமானிகள் முதல் நாளிரவே மகாநாட்டு மண்டபத்திற் கருகிலிருந்த கிணறுகளை அசுத்தப்படுத்தினர். மேலும் சேர். பொன். இராமநாதனைத் தலைவராகக் கொண்ட வேதாகம சங்கத்தினர், மகாநாட்டு மண்டபத்திற்குள் கற்களை வீசி மகாநாட்டில் கலந்து கொண்டவர்களைத் துரத்தினர். பொலிஸார் தலையிட்டிருக்காவிடின் இந்நிகழ்ச்சி வன்முறைச் சம்பவங்களுக்கு இடம் கொடுத்திருக்கும். இம்மகாநாடு இதனுல் அவ்விடத்தில் நடைபெறுவதைக் கைவிட்டு யாழ்ப்பாணம் ரிஜ்வே மண்டபத்தில் நடைபெற்றது. [40]

தொடரும்

## நீதிக்கதை

எரியும் தீயிடம்
காற்று இரைந்தது

''வா.
எங்கே நான் செல்கிறேனே
அங்கெல்லாம்
வா.''

வழி தொடரும் முன்
நெடுநாள் தோழன்
காற்றின் மீது
அனலை வாரி யிறைத்து
பின் அமைதியாய்
தன் நாக்கைச்
சுழற்றியது தீ :

''செல்லும் திசையாய்
நீ இருக்கலாம்.
ஆனுல் நானே உன் சுவடுகளில்
அழிவற்ற ....சுடராய்....
கீர்த்தியாய்....
நிலைத்துஎரிகிறேன்''

இமானுவெல் லக்கபா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பேசுகின்ற தாய் நிலங்கள்

*அருட்குமரன்*

கண்ணுக் கெட்டிய தூரம் வரை பச்சை விரித்து அந்நியருக்காகப் புகையிலைகள் விளைந்தபடி இருந்தன. குளிர் எப்போதும் போலவே ஓடி வருகின்ற ஆற்று நீரை உறைய வைக்க கங்கணம் கட்டி நிற்கிறது. காற்று மிக மெலிதாக முதிய உழவன் ஒருவனின் மூச்சுப் போல உலவுகின்றது. வானம் தொட்டுவிட முயலுகின்ற அந்த மரம் கனத்த சோகத்தோடு நிமிர்கின்றது. அடிமரம் இணைந்து வாழ்ந்த மனிதர்களது துயரக் கதைகளைச் சுமப்பதால் விம்மி வெடித்து கோறைகள் ஏற்பட்டுப் போய் கனமாக இருந்தது. இனிக் காற்றுப் பலமாக வீசி என்னதான் சாதிக்கப் போகிறது. வைராக்கியமும் நம்பிக்கையும் ஆடாதிருந்த அந்த மரத்தின் ஒவ்வொரு அங்கத்திலும் கனன்று கொண்டு இருந்தது. ரெட்றிக் கோவின் பாட்டனுர்தான் ஒரு சிறு கிளையாக அதனைக் கொணர்ந்து வயலின் தென் கோடி முனையில் நாட்டியவர் ஒரு பரம்பரையாக ரெட்றிக் கோவின் குடும்பத்தை குடும்ப உறவினர்களை அந்த மரத்துக்கு நன்கு தெரியும். இந்த வயலில் அவர்கள் பாடுபட்டதை தந்தை நொந்து முதியவனதை இளைய பிள்ளைகள் ஏர் பிடித்து உழுததை, பச்சை துளிர்க் கையில் ஓடி மகிழ்ந்ததை, நிறையச் சக்திகள் இன்று மறக்கடிக்க முயலுகின்றன. மரம் சிரிப்போடு தலையசைத்து குஞ்சுகளை அணைக்கும் தாய்க் கோழி போல நெஞ்சை நிமிர்த்துகிறது.

எப்படி நாங்கள் அந்நியராவோம்?

எவ்விதம் நாங்கள்
தாய் மண்ணினை மறப்பது?
மண் இனிப் பேசும்.
பரம்பரையாக உழைத்தோடனவர்
நிலம் இதுவெனச் சொல்லிக்
கண்ணீர் மறுக்கும்.

சிற்பிக்குரிய இலாவகத்துடன் யாரோ மரத்தில் செதுக்கியிருந்த வாசகங்களில் பனி உறைந்திருந்தது. அந்தப் பரம்பரைகளே கலைஞர்கள் தாம். தாய் மண் அவர்களது கலைத்தன்மையை நன்கறியும்.

ரெட்றிக் கோவின் பாட்டனுக்கு பாட்டனின் வாழ்வு கூட இந்தச் சிறுதுண்டு புகையிலை விளைகிற நிலத்தோடு தான் பிணைந்திருந்தது. மேலே சற்று நிமிரத் தெரிகிற மலைகளில் கூட அவர்களின் கால்கள் பதியாத இடமில்லை. காலைகளில் பனி படரத் தொடங்கும் முன்னரே இந்தப் பள்ளத் தாக்கில் அவர்களது வியர்வை மண்ணேடு கலக்கத் தொடங்கிவிடும்.

ரெட்றிக் கோவும் தந்தையிடமிருந்து பெற்ற மாபெரும் சொத்து இந்த நிலம்தான். தந்தை கற்றுக் கொடுத்ததெல்லாம் தாய் நிலத்தை நேசிக்கும் வித்தை ஒன்றைத்தான். இவனும் அப்பனுக்குப் போட்டியாக அழகான மனைவி மேரியை விடவும் ஆழமாக தாய் நிலத்தை காதலித்தான். மீண்டும் தாய்மை எய்தியிருந்த மேரி புகையிலைப் பயிர்களை ஆசையோடு வருடிக் கொண்டு அல்லது களைகளைக் கெல்லி யெறிந்தபடி இவனேடு பேச்சுக் கொடுப்பாள். வெய்யில் உறைப்பதைக் கூட உணராது இவன் வேலையில் ஆழ்ந்திருப்பான்.

படபடத்தபடி மேரி நகர்ந்தாள் ''அவர்கள் வருகிறார்கள்'' இதைக்கேட்ட ரெட்றிகோ வரப்புக்கு நிமிர்ந்தபடி வந்தான். அவர்களைப் பார்த்ததும் இவனுக்கு வெறுப்பும் ஆத்திரமும் எல்லை மீறியது. என்ன? கோபமாக விழிகள் கேட்டது.

நாங்கள் 'அன்கா' பலதேசிய விவசாயக் கூட்டுத்தாபனத்தில் இருந்து வருகிறோம்.

www.tamilarangam.net



# காற்றோடு பாடல் கலந்து மலைகளை அதட்டி எதிரொலி வியாபிக்கிறது.

'தெரியும் முன்பு வந்தபோதே எனது நிலையை தெளிவாக்கி விட்டதாக நம்புகிறேன்.'

உன்னைப் போலவே மற்ற உழவர்களும் பேசுகின்றனர். நன்மையை நீங்கள் விரும்பவில்லை.

நாகரீகமாக எச்சரித்தபடி கும்பல் நகர்ந்தது. ரொட்றிக்கோ தன்னோடு பேசிய அம்மண்ணிறத் தலை வெள்ளையனின் கழுத்தை சாகும் வரை நெரிக்காது விட்டமைக்காக தன்மீதே ஆத்திரப்பட்டான்.

ஒரு சாவீடு போல அக்கிராமத்தில் ஒரு வாரம் நகர்ந்தது. அவர்களது ஜீவிதம் மிகுந்த வாழ்வு நீர்க்குட்டையாகிவிட்டது. எப்படி? எப்படி? அவர்களால் இதனை தாங்க முடியும்? ஊர் நிலங்களையெல்லாம் சுவீகரித்து அந்நிய விவசாய கூட்டுத்தாபனம் நடத்தப் போகிற பண்ணைகளுக்குக் கொடுப்பதை எல்லா விவசாயிகளும் எதிர்க்கத்தான் செய்தனர். அவர்களது தாய்மண் பறிபோகப் போகிற நினைவையே வெறுத்தபடி ரொட்றிக்கோவும் மனைவியும் மாலைத் தேநீரை அருந்திக் கொண்டிருந்தனர். மழை நாளாக இருந்ததால் ரொட்றிக்கோ அன்று வயலுக்குச் செல்லவில்லை. சிறுவன் வீட்டு வாசலில் துள்ளிக் கொண்டிருந்தான்.

தெருவில் வாகனங்கள் என்றுமில்லாதபடி இரைந்தன. வீதியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் தலைதெறிக்க ஓடினார்கள். அச்சம் விஷக்காற்றாய் பரவ மூங்கில் தட்டிகள் ஒவ்வொரு வீட்டு வாசலையும் அடைத்தன. அணி நடை பயின்றபடி பிலிப்பைன்ஸ் தேசத்தை அபாயங்களில் இருந்து காப்பாற்ற உருவாக்கப்பட்ட இராணுவம் தட்டிகளைப் பிடுங்கி எரிந்து வீடுகளுக்குள் நுழைந்தது. பளபளத்த துப்பாக்கிகள் அந்நிய எஜமான விசுவாசத்தைப் பிரகடனம் செய்தன. துப்பாக்கிகளின் அசைவால் சிறுவன் அலறித் தவித்தான். ரொட்றிக்கோவின் கழுத்தை துப்பாக்கியால் அழுத்தி கெக்கலி கொட்டினான் ஒருவன். சிறுபயல் அவனை வன்மத்தோடு உமிழத் துப்பாக்கியின் பின்புறம் அவன் பிடரியில் பதிந்தது. தடாலெனச் சாய்ந்து சிறுவன் நினைவிழந்தான். மேரியின் கைகளை பின்புறமாக இறுக்கித் தூக்கி ஒருவன் வெளியே வீச மற்றவன் பின்னால் நகர்ந்து ரொட்றிக்கோவின் முதுகில் முனையை அழுத்தினான். இருதயத்தை பின்புறமாக குறிபார்த்து விசையைச் சிரித்தபடியே அழுத்தினான்.

மூங்கில் வீட்டின் ஓரச் சுவர்கள் சிவந்தன. முகத்தில் தெறித்த குருதியை புறங்கையால் துடைத்து விட்டு ரொட்றிக்கோவின் சடலத்தை காலால் உதைத்தபடி இராணுவம் வெளியேறியது. வெளியேறும் முன்னர் இராணுவத் தளபதி மண்ணின் மைந்தர்கள் அந்நியரானதை மிரட்டும் குரலில் அறிவித்தான்.

இன்றைய நாட்களில் அந்நியரின் சமீபத்தைய கண்டுபிடிப்புகளான மிக நவீன இயந்திரங்கள் வயலில் படபடக்கின்றன. மண் வளம் இழந்தால் அவர்களுக்கென்ன? இலாப வெறி புதுப்புது உரங்களாக மண்ணில் விழுகிறது. தூர மலைகளில் ஆயுதங்களோடு முகாமிட்டு இருந்த ஆயிரக்கணக்கான நிலமிழந்தோர் முன்னைவிடவும் இறுக்கமாக தாய்நிலத்தோடு பிணைந்திருந்தனர். அவர்களிலும் பலர் இராணுவத்தோடு அடிக்கடி ஏற்படும் மோதலில் பலியாகியிருந்தனர். நிலமுழுத பரம்பரை இன்று போர் புரிந்து வாழ்கிறது. இரவின் நிசப்தத்தைத் துரத்தி அவர்கள் பாடுகிறார்கள். பாடலில் இழைந்து காற்றில் எழுகிற நம்பிக்கைத் துளிகளில் அப்பெருமரத்தின் கிளைகள் படபடக்கின்றன. நிலச் சூறையாடிகளிடம் முகங்களை இழந்த குடியானவர்களின் கதையினை மண், காற்று, மலைகள், ஆறுகள் எல்லாமே உரக்கச் சொல்லுகின்றன. ஏழைக் குடியானவர்களின் போராட்ட நம்பிக்கையாக நெடுமரம் காற்றில் ஆட மறுத்து நிமிர்ந்தபடியே உலகுக்குச் சொல்கிறது.

வாழ்வு முழுவதும் வியர்வை
சொரிந்து

உழைத்தவரை அறிவேன்.

தாய் நிலம் எங்கணும்
பச்சை செழித்தது.

அவர்களின் கையாலே

மீண்டும் தனையர்கள் ஓடி
மகிழ்வர்.

என் நிழல் அருகினிலே

அன்றைய நாட்களில்
வெற்றிக்களிப்பில்

அவர்கள் ஆழ்ந்திருப்பர்.

காற்றோடு பாடல் கலந்து
மலைகளை அதட்டி எதிரொலி
வியாபிக்கிறது.

மூலம் : A CASE STUDY (PHILIPINES.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இமானுவெல் லக்கபா கவிதைகள்

தமிழில் : ஜே. சாந்தாராம்

### தூக்கம் கலைந்தவர்கள்

நாம்
ஒரு இனமற்று இருக்கிறோம்.
என்றாலுமென்ன.... ?
இனங்கள் யாவும் நம்மினமே.

நாம்
வீடற்றவர்கள், பெயரற்றவர்கள்
என்றாலும்
எல்லா வீடுகளும் நமதே,
எல்லா பெயர்களும் நமதே

பாசிஸ்ட்டுகளுக்கு
நாம் முகமற்ற எதிரி.

அவர்கள்
மரணத்தின் தூதுவர்கள்.

இரவுக் கொள்ளைக்காரர்கள் போல்
வருகிறார்கள்
அவர்களின் ஒவ்வோர் அசைவும்
திடீர் திடீரென தாக்கும்
வஞ்சகப் புயலின்
ரகசிய ஊற்றுக்கண்.

நாம் வெறுமையில்
பயணம் விரித்து
தவற விட்ட திசையில்
தோள் பிரிந்தோம்.

மிருக கால் கொண்ட
ராணுவ பலத்துடன்
மீண்டும் நாம் மனமிணைந்து
தோளிணைய வேண்டிய தருணமிது.

தூக்கம் கலைந்தவர்கள்,
தேவ தூதர்கள்.

தொழிலாளிகள்
விவசாயிகள்
பலரை இழந்துப்போன
பரிதவிப்பில்...

இந்தத்தலைமுறை
உண்மையின் இருப்பிடத்தை
அறிந்துக் கொண்டு விட்டது.

இனி
அதுவே அதன் வீடு.

(பிலிப்பைன்ஸ் கலைஞர்களுக்கு
எழுதிய கடிதங்களிலிருந்து....)

### மக்கள் போராளி

வழி எங்கிலும்
முகம் முகமாய் நிமிர்கிற
மலைநெரிசலை
பிளந்தோடி தாவிச்செல்லும்
மாவீரன் அவன்.

கதிகலக்கும் நீர்வீழ்ச்சிகளையும்
காட்டாற்றுப் பாலங்களையும்
கயிற்றில் நடத்தல் போல்
சாவில் விழாமல் கடக்கும்
சர்க்கஸ்காரன் அவன்.

உண்மையின் கதாப்பாத்திரத்தில்
புரட்சி மேடை நடிகன்.

அவனில் அசையும் நடிப்பில்
உண்மை பொய்யை
கண்களால் மக்கள் படிக்கிறார்கள்.

அவர்களே சிறந்த விமர்சகர்கள்.

அழுக்கு வாழ்வில் உழலவும்
சிரிப்பூட்டவும் செய்கிற விகடன் அவன்.

ஆள்வோரின் 'சொகுசை'
உடல் சுளித்து உளறிப் பிதற்றி
கேலிச் சிரிப்பை
மக்களிடமிருந்து எழுப்புகிறான்.

தன்னை மக்களிடம் பகிர்ந்த
வெற்றிக் களிப்புடனும்
உறுதியுடனும்
போரில் அவன் முன்னேறுகிறான்.

அவன் தோழமையில் மக்கள்
சந்தோஷம் காண்கிறார்கள்.

அவர்களில் இன்று
அவன் மட்டுமே ஆயுதபாணி.
என்ற போதிலும்

அவனை நிராகரிப்பதற்கில்லை ;
மக்கள் போராளி என்பதால்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழ விடுதலைப் போராட்டத்தில்

# 1986

ஜனவரி 10 : முல்லைத்தீவு மற்றும் அதனைச் சூழ்ந்த பகுதிகளில் 2000 க்கு மேற்பட்ட தமிழர்களை சிங்கள இராணுவத்தினர் கைது செய்தனர்.

ஜனவரி 18 : யாழ்ப்பாணத்தில் போராளிகளுக்கும் சிங்கள இனவெறி ராணுவத்திற்கும் இடையே கடும்போர். ராணுவத்தினர் வான்வழி வந்து விமானத்தாக்குதல் நடத்தினர்.

ஜனவரி 18 : பத்திரிகையாளர் என்ற பெயரில் ஈழப் பகுதிகளில் உளவு வேலைப் பார்த்த பிரிட்டிஷ் உளவாளி பெனிலோப் ஈவா வில்லிஸ் ஈழப்புரட்சி அமைப்பினால் முல்லைத் தீவில் தடுத்து வைக்கப்பட்டார்.

ஜனவரி 28 : வடக்கு, கிழக்கு இணைப்பை ஏற்றுக் கொள்ள முடியாது என்று இந்து பத்திரிகைக்கு ஜெயவர்த்தன அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

பிப்ரவரி : 14 தமிழர் விடுதலைக் கூட்டணி முன் வைத்த பிரேரணைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என ஸ்ரீலங்கா அரசு அறிவித்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரேரணைகள் 1985 டிசம்பர் மாதம் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியிடம் சமர்ப்பிக்கப்பட்டதாகும். சமரச முயற்சிக்கான இந்தப் பிரேரணையையே ஸ்ரீலங்கா அரசு நிராகரித்தது.

பிப்ரவரி 19 : அம்பாறை மாவட்டத்தில் உள்ள தங்கவேலாயுதபுரத்தில் நூற்றுக்கு மேற்பட்டத் தமிழர்கள் சிங்கள இராணுவ வெறியர்களால் மிகக் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர்.

பிப்ரவரி 19 : மலையகத்தில் உள்ள பிந்தல எஸ்டேட்டில் மூன்று வயது பச்சிளங் குழந்தையையும் இராணுவத்தினர் கொன்றனர். பலரைப் படுகாயப்படுத்தினர். சிங்கள இராணுவத்தின் கொடூரத்தை எதிர்த்து 5000 தமிழ்த் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பிப்ரவரி : 22 மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அக்கரைப்பற்றுக் கிராமத்தில் வேலை செய்து கொண்டிருந்த 103 தமிழ் விவசாயிகளை ஜே. ஆர் ஜெயவர்த்தனவின் இன வெறி ராணுவம் படுகொலை செய்தது.

பிப்ரவரி : 27 ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என இந்திய நாடாளுமன்றத்தில் வெளியுறவு அமைச்சர் பகத் வலியுறுத்தினர்,

மார்ச் : 2 இந்தியாவின் அண்மைய செய்திகளால் நடுநிலைமை வகிக்கும் நாடாகவோ, அல்லது நட்பு நாடாகவோ, தெரியவில்லை என இலங்கை அரசு தெரிவித்தது. நட்பு நாடு என்ற நிலையை இந்தியா பேணவில்லை என்றும் இலங்கை அரசு அறிவித்தது.

மார்ச் : 12 யாழ்ப்பாணம் பகுதியில் சிங்கள இராணுவத்திற்கும் போராளிகளுக்கும் இடையே நடைபெற்ற யுத்தத்தில் 74 பேர் சாவு.

மார்ச் : 30 இறுதிச் சுற்றுப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வதற்காக ரொமேஷ் பண்டாரி ஏப்ரல் 20 ஆம் தேதி கொழும்புக்குச் செல்வார் என்று இந்திய அரசு சார்பில் அறிவிக்கப்பட்டது. ரொமேஷ் பண்டாரி வெளியுறவு செயலாளர் என்ற முறையில் அல்லாது ராஜிவ் காந்தியின் விஷேசத் தூதுவராகவே செல்வார் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஏப்ரல் 5 ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தில் தாயகம் திரும்பிய மலையக மக்கள் தமிழகத்தில் உள்ள கொடைக்கானல் மலைப்பகுதியில் கொத்தடிமையாக சித்ரவதைச் செய்யப்பட்டதை எதிர்த்து இந்திய சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு.

ஏப்ரல் : 21 திருகோணமலையில் ஏற்பட்ட அணை உடைப்பினால் வெள்ளம் பெருக்கெடுத்து 100 தமிழர்கள் இறந்தனர். 50ஆயிரம் பேர் வீடுகளையும் தமது உடைமைகளையும் இழந்தனர்.

மே : 1 தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் தமிழீழ விடுதலை இயக்கத்திற்கும் இடையே ஏற்பட்ட மோதலில் இருதரப்பிலும் நூறு போராளிகளுக்கு மேல் இறந்தனர். தமிழீழ விடுதலை இயக்கச் செயலதிபர் ஸ்ரீ சபாரத்தினம் படுகொலை செய்யப்பட்டார்.

மே : 3 கொழும்பு நகரில் ஏர் லங்கா விமானம் வெடிகுண்டு வைத்துத் தகர்ப்பு. 40 பேருக்கு மேல் இறந்தனர்.

www.tamilarangam.net



மே : 4 அகில இந்திய அரசியல் கட்சித் தலைவர்கள் பங்கேற்ற ஈழ விடுதலை மாநாடு தமிழீழ விடுதலை ஆதரவாளர் அமைப்பினால் (டெசோ) மதுரையில் நடத்தப் பெற்றது.

மே : 30 கிழக்கு மாகாணம் மூதூர் பகுதியில் பூமாலைவெட்டு எனுமிடத்தில் நிலக் கண்ணி வெடித் தாக்குதலுக்குள்ளாகி முப்பதுக்கு மேற்பட்ட இராணுவ வீரர்கள் இறந்தனர்.

மே : 31 இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக சிங்கள இனவெறி ராணுவம் இழைத்து வரும் அட்டூழியங்களுக்கும் உயிர்க் கொலைகளுக்கும் எதிராக தமிழகம் முழுவதும் 'பந்த்' நடைபெற்றது. அனைத்து அரசியல் கட்சிகளும் பந்த்'தில் பங்கேற்றன.

ஜூன் : 3 கலைஞர் மு. கருணாநிதி தமது பிறந்த நாளில் ஈழ விடுதலை இயக்கங்களுக்கு வழங்குவதற்கென்றே நிதி திரட்டினார். இரண்டே முக்கால் லட்ச ரூபாய் நிதி திரண்டது. இதை ஐந்து விடுதலை இயக்கங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்படும் என்று கலைஞர் அறிவித்தார்.

ஜூன் : 10 தமிழ் நாட்டில் ஸ்ரீலங்கா அரசுக்காக உளவு பார்த்ததாக குற்றம் சாட்டப்பட்டு 12 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஜூன் : 28 பதினைந்து நாடுகளின் 22 மாணவ அமைப்புக்கள் பங்கேற்ற ஆசிய மாணவர் ஒன்றிய மாநாடு மாணவர் இளைஞர் பொதுமன்றத்தால் (GUYS) நடத்தப்பெற்றது. மாநாடு ஒரு வாரம் நடைபெற்றது.

ஜூலை 10 : கிழக்கு மாகாணத்தில் மூன்று கவுன்சில்கள் அமைய வேண்டுமென இலங்கை முஸ்லீம் லீக் தெரிவித்துள்ளது.

ஜூலை 13: சமீபகாலமாக தங்கள் நாட்டைப் பீடித்திருக்கும் இனப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படுவதற்கு தாங்கள் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சியை நான் பாராட்டுகிறேன் என்று ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ரீகன் வாழ்த்து தெரிவித்தார்.

செப்டம்பர் 30: இலங்கை இனவெறி அரசின் வதை முகாமாகிய வெலிக்கடைச் சிறையில் தமிழ்க் கைதிகள் உண்ணா விரதம். 26 நாட்கள் உண்ணா விரதம் இருந்த தமிழ்ப் போராளி ஒருவர் மரணமடைந்தார்.

அக்டோபர் : 4 ஈழத்தின் கிராமங்கள் மீது குண்டு வீசிய ஹெலிகாப்டர் விமானத்தை போராளிகள் சுட்டு வீழ்த்தினர். ராணுவ உயர் அதிகாரி உட்பட நால்வர் சாவு.

அக்டோபர் 6 : ஸ்ரீலங்கா அரசுடன் நடக்க இருக்கும் பேச்சு வார்த்தையில் தமிழ்ப் போராளிகள் பங்குபெற வேண்டுமென இந்திய அரசு வேண்டுகோள் விடுத்தது.

அக்டோபர் 10 பயங்கர வாதத்திற்கு எதிராக இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை வழங்குவதற்கானப் பட்டியலில் அமெரிக்க அரசு இலங்கையையும் சேர்த்துக் கொண்டது.

அக்டோபர் 11 ஆயுதங்களை கீழே போட்டால் தான் மாநில அதிகாரங்களைப் பற்றிப் பேச்சு வார்த்தை நடத்த முடியும் என ஜே.ஆர். ஜெயவர்த்தன நிபந்தனை விதித்தார்.

நவம்பர்: 3 சென்னையில் பொதுமக்களுக்கும் போராளிகளுக்கும் மோதல். போராளிகள் சுட்டதில் ஒருவர் சாவு.

நவம்பர். 8 தமிழகமுழுவதும் விடுதலை அமைப்புக்களின் அலுவலகங்கள், வீடுகள் சோதனை. ஆயுதங்களை தமிழகக் காவல் துறையினர் பறித்தனர்.

பாலக்குமார், செல்வம், பிரபாகரன் பாலசிங்கம் ஆகியோர் வீட்டுக் காவலில் வைக்கப் பட்டனர்.

நவம்பர் 18: தென் கிழக்கு ஆசிய நாடுகளின் மாநாட்டில் பங்குபெற ஜே.ஆர். ஜெயவர்த்தன பெங்களூர் வந்தார். அவர் வருகையை எதிர்த்து கறுப்புக் கொடி காட்டிய நெடுமாறன் உட்பட நூறு பேர் கைது.

நவம்பர். 21. ஜியோனிச வெறியன் இஸ்ரேல் அதிபர் கைம் ஹெர்சாக் இலங்கைக்கு ரகசிய விஜயம் செய்தார். ஜே. ஆர். ஜெயவர்த்தன அவரைச் சந்தித்தார்.

நவம்பர் 21 : மீண்டும் ஈழ விடுதலை அமைப்புகளின் அலுவலகங்களில் சோதனை. தமிழகக் காவல் துறையினரால் தகவல் தொடர்பு கருவிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

நவம்பர். 20 : இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வுக் காண்பது குறித்த பேச்சுவார்த்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மனைவி இழந்தவனின் நடனம்

□

பாப்லோ நெருடா

□

தமிழில் : சலபதி

ஓ, மலீனா,
இந்நேரம் என் கடிதத்தைப் பார்த்திருப்பாய்,
இந்நேரம் கோபத்தில் அழுதிருப்பாய்.

வெறி நாய் என்றும்
நாய்களைப் பெற்றவள் என்றும் வசைபாடி
இந்நேரம் என் தாயின் நினைவை
இழிவுபடுத்தி இருப்பாய்.

இனி எப்போதும் வெறுமையாக
இருக்கப்போகும்
என் பழைய காலணியைப் பார்த்தவாறே
இந்நேரம் நீ மட்டும் தனியாக
பிற்பகல்நேரத் தேநீரைப் பருகி இருப்பாய்.

வெப்ப நாடுகளையும்,
எனக்குப் பெரும் தொல்லை தந்த
நச்சுக் காய்ச்சல்களையும்,

இன்றும் நான் வெறுக்கும்
ஆங்கிலேயர்களையும்
நான் இப்போதும் அங்கே இருந்து கொண்டு
குறைகூறிக் கொண்டிருப்பதாக நினைத்து
என்னைத் திட்டிக் கொண்டிராமல்
என் காய்ச்சல்களைப் பற்றியும்
என் இரவுநேரக் கனவுகளைப் பற்றியும்
என் உணவுமுறை பற்றியும்
உன்னால் நினைவுகூர இயலாது.

மலீனா,
உண்மையில், இரவு எத்துணைப் பெரிது,
உலகம் எத்துணைத் தனிமையானது !

முன்புபோலவே,
ஒற்றையறை கட்டும்,
உணவு விடுதிகளின்

---

தைகளில் இலங்கை-இந்திய அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்தியாவின் சார்பில் வெளியுறவுத் துறைச் செயலாளர் ஏ. பி. வெங்கடேஸ்வரன், இந்தியத் தூதர் ஜே.என் திட்சித், இலங்கை சார்பில் வெளியுறவுச் செயலர் ஜெயசிங்க, இலங்கைத்தூதர் திலக ரத்னே ஆகியோர் பங்கு கொண்டனர்.

நவம்பர் : 22. தகவல் தொடர்பு கருவிகளைப் பறித்துக் கொண்டதை எதிர்த்து விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் சாகும்வரை உண்ணா விரதம் ஆரம்பித்தார்.

நவம்பர் 28 : இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான சமரசத் திட்டம் குறித்துப் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு மத்திய இணை அமைச்சர்கள் ப. சிதம்பரம், நட்வார்சிங் ஆகியோர் செல்வார்கள் என்று இந்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

டிசம்பர் 7 : மட்டக்களப்பு காத்தான்குடியில் ஊர்காவல் படையினரது நடவடிக்கையைத் தொடர்ந்து ஊரடங்கு அமுலுக்கு வந்தது.

டிசம்பர் 13. தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் இரு தரப்பிலும் 25 பேருக்கு மேல் இறந்தனர்.

டிசம்பர் 15 : இலங்கை அனுப்பியுள்ள புதுப்பிரேரணைகள் குறித்து தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆருடன் ஈழப் போராளிகள் பேச்சு வார்த்தை நடத்துவர். ஈழப்போராளிகள் அமைப்பின் ஐந்து பிரிவினரை தனித்தனியே அழைத்து ஆலோசனை நடத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

www.tamilarangam.net



பாப்லோ நெருடா ஸ்பானிய மொழியின் மகாகவி. மக்கள்கவிஞன்.

ஆறிப்போன சாப்பாட்டுக்கும்,
நான் பழகிவிட்டேன் ;
என் சட்டையையும் சிராயையும்
தரைமீது கழற்றிப் போடுகிறேன்
என் அறையில்,
உடை மாட்டக் கொக்கிகள் இல்லை

சுவர்களில் எவருடைய படமும் இல்லை.
உன்னை மீண்டும் பெறுவதற்காக
என் ஆன்மாவில் உள்ள
அத்தனை நிழல்களையும் தருவேன்.

மாதங்களின் பெயர்கள்
மிரட்டல்களைப்போல் ஒலிக்கின்றன.

குளிர்காலம் என்ற சொல்
சாவுப் பறைபோல ஒலிக்கின்றது.
என்னைக் கொன்றுவிடுவாயோ என்று அஞ்சி
தென்னைமரத்தடியில் புதைத்து வைத்த கத்தியை
ஈரமணலடியே, செவிட்டு வேர்களுக்கிடையில்
சிறிதுநேரம் கழித்து நீ கண்டெடுப்பாய்.

உன் கையின் அழுத்தத்துக்கும்
உன் காலின் மினுங்கலுக்கும் பழக்கப்பட்ட
அந்தச் சமையலறை எஃகைக்காண
திடீரென நான் அவாவுகிறேன்.

மனித மொழிகள் அனைத்திலும்
ஏழைகள் மட்டுமே உன் பெயரை அறிவர்.

துளைக்கமுடியா தெய்வீகப் பொருள்களாலான
உன் பெயரைப் புரிந்துகொள்ள
அடர்ந்த மண்ணுக்கும் முடியவில்லை
ஒரிடத்தில் நிலைப்படுத்தப்பட்டக்
கதிரவனின் நீரைப்போல ஓய்ந்திருக்கும்
உன் கால்களின் பகலையும்,

உன் விழிகளில் தூங்கிப் பறந்து
வாழும் சிட்டுக்குருவியையும்
உன் இதயத்தில் நீ வளர்க்கும் வெறி நாயையும்
நினைக்கையில் துயர் மேலிடுகின்றது.

இதைப்போலவே,
நமக்கிடையே இருக்கும் இறந்தவர்களையும்
இனி இறக்கப்போகிறவர்களையும்
நான் பார்க்கிறேன்.
சாம்பலை மூச்சாகவிடுகின்றேன்.

காற்றிலேயே சாபம் இடுகிறேன்.
என்னைச் சுற்றி எப்போதும் இருக்கப்போகும்
இந்த அகண்ட வெறுமை வெளியையும்,
பூதாகரமான கடற்காற்றையும்
உன்னை அடைவதற்காக நான் தருவேன் !

குதிரைத் தோலின்
அங்கமாகிவிடும் சாட்டையைப்போல்
நினைவுமறதி கலக்காத
நீண்ட இரவுகளில் கேட்கும்
உன் இரைந்த மூச்சும்
காற்று மண்டலத்தின்
ஒரு பகுதியாகி விடுகின்றது.

மெதுவாக, ஆடிக்கொண்டே
வெள்ளியாக, தேனை ஊற்றுவதுபோல
கொல்லைப்புறத்து இருட்டில்
நீ சிறுநீர் கழிப்பதைக் கேட்பதற்காக
நான் வைத்திருக்கும் நிழல் கூட்டத்தையும்,
என் ஆன்மாவில் சண்டையிடும்
பயனற்ற வாள்களின் போர் ஒலியையும்,
மறைந்து போனவற்றையும்,
மறைந்துபோன உயிர்களையும்,
புரிந்துகொள்ள இயலாத அளவுக்கும்
பிரிக்கமுடியாமல் தொலைந்து போனவற்றையும்,
என் நெற்றியின் மீது தனியாக இருந்து
அழைக்கும் குருதிப் புருவையும்
எத்தனை முறை வேண்டுமானாலும் தருவேனே !

---

டிசம்பர் 18 : இலங்கைப் பேச்சுக்களிலிருந்து விடுபட இந்தியா முயற்சிப்பதாக இலங்கை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார். இந்தியா மேற்கொண்ட சமரச முயற்சிகளுக்கு போராளிகளும், இலங்கை அரசும் போதிய ஒத்துழைப்புத் தராததால் இந்தப் பேச்சு வார்த்தைகளிலிருந்து விடுபட இந்திய அரசு முயல்கிறதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

டிசம்பர் 19 : தமிழ் நாட்டில் ஈழப் போராளிகள் ஆயுதம் வைத்திருத்தலாகாது. இது தான் தமிழக அரசின் நிலை என தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆர் தெரிவித்துள்ளார். ஈழப் போராளிகள் இயக்கத்தை சேர்ந்த ஒரு பிரிவுக்கு (எல். டி. டி. இ பிரபாகரன்) தான் ஆதரவு அளிப்பதாக ஒரு சில அரசியல் கட்சிகள் செய்து வரும் பிரச்சாரத்தை மறுத்தார்.

டிசம்பர் 21 : இலங்கையில் பிணைக்கைதிகள் (இரு விடுதலைப் புலிகளுக்குப் பதிலாக இரு இராணுவத்தினர்) பரிவர்த்தனை வெள்ளியன்று வெற்றிகரமாக நிறைவேறியுள்ளதை அடுத்து இலங்கை அரசு, விடுதலைப் புலிகளுடன் நேரடிபேச்சு நடத்துவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படலாமெனத் தெரிகிறது.

டிசம்பர். 27 தமிழகக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழீழ விடுதலை அமைப்பினரை விடுதலை செய்யக் கோரி செல்வம் சாகும்வரை உண்ணாவிரதம். □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஈழப் புரட்சி அமைப்பின் பதினோராம் ஆண்டு நிறைவு :

1975ம் ஆண்டு லண்டனில் கருவெடுத்த இயக்கமான ஈரோஸ் 1975 நவம்பர் 23ல் தனது முதல் பிரகடனத்தை வெளியிட்டது.

1. தமிழ்ப்பேசும் மக்களுக்கு நிரந்தரத் தீர்வு அவர்கள் வாழும் பகுதிக்குள் தேசிய அந்தஸ்து (State hood) நிறுவுதல்.

2. அத்தேசிய அந்தஸ்தானது மன்னார் முதல் மட்டக் களப்பு வரை பருத்தித்துறை முதல் பதுளை பொத்துவில் உள்ளடங்கிய பிர தேசங்களாகும்.

3. பண்டைய பாட்டாளிகளென (Classical Proletariat) இனம் காணும் மலையக மக்களை உள்ளடக்கிய தீர்விலேயே ஈழம் நிதர்சன மாகும்.

4. ஒவ்வொரு போராட்டமும் வர்க்கப் போராட்டமே என்பதனை ஏற்றுக்கொள்ளும் நாம் ஈழத்தின் போராட்டமும் வர்க்க அம்சத்தை உள்ளடக்கியதாகும் என்பதனால் மலையக மக்களை முன்னணியாகக்கொண்ட (Vanguard) போராட்டமாக அமைதல் வேண்டும்.

5. ஈழத்திற்கான போராட்டம் என்பது அனைத்து மக்களின் ஆயுதம் தாங்கிய போராட்டமாகும்.

இவ்வரசியல் பிரகடனங்களினூடாகவே ஈரோஸ் தன் செயற்பாட்டை மேற்கொண்டது. இவைகளுக்கான செயல் வடிவத்தினை 1977ம் ஆண்டு ஏப்ரலில் ஈரோஸ் தனது இரண்டாவது பிரகடனமாக வெளியிட்டது.

1. ஈரோஸ் செயற்பாடுகள் ஈழத் திற்குள் நிலை நிறுத்தப்பட வேண்டும்.

2. இச் செயற்பாடுகள் பொருளாதார, அரசியல் இணைந்த திட்டங்களினூடாக அமைதல் வேண்டும்.

3. இத்திட்டங்களில் பணியாற்றி பயிற்சி முடித்த தோழர்கள் ஈரோஸ் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும்.

4. இவ் அரசியல் பொருளாதார திட்டங்கள் போராட்டத் தளங்களாக மாற்றப்படவேண்டும்.

5. ஈழத்திற்குள் போராடும் இயக்கங்களை நமது கருத்துக்கமைய இணைக்க வேண்டும்.

6. இச்செயற்பாடுகளினூடாக தெரிவு செய்யப்படும் முதல் ஐம்பது தோழர்கள் பூரண இராணுவப் பயிற்சி முடித்தபின் திட்டப் பிரகடன மாநாடு (Planary Session) நடத்தப் படும்.

7. இத்திட்டப் பிரகடனத்தின் பின் ஈரோஸ் இயக்கமாக பரிணமம் பெற்று போராட்டத்தை முன்னெடுக்கும் என பிரகடனம் செய்யப்பட்டது.

1980 ஏப்ரலில் மூன்றாவது பிரகடனத்தை ஈழத்தில் திருமலையில் வெளியிட்டது.

1. ஈழத்தில் இயக்கச் செயற்பாட்டிற்கென சில அதிகாரங்களைக் கொண்டதான பொது ஆணைக்குழு ஒன்று அமைப்பதென்றும்,

2. மட்டக்களப்புப் பகுதியில் வேலை செய்வதற்காக அங்கு ஏற்பட்ட இயற்கைச் சீரழிவினைப் பயன்படுத்தி கூரைத் தகட்டுத் திட்டமொன்றை ஏற்படுத்துவதென்றும்,

3. ஈழம் முழுவதற்குமான இயக்க ஊடகமாகவும், எமது பிரச்சினைகள் சம்பந்தமான சித்தாந்த விளக்கமாகவும் 'தர்க்கீகம்' என்ற பெயரில் மாத இதழ் ஒன்றை வெளியிடுவதெனவும், தமிழ்நாட்டிலிருந்து செயற்படுவதற்கு எமது ஊடகமாக சென்னையிலிருந்து 'பொதுமை' என்ற இதழ் ஒன்றை வெளியிடுவதென்றும்,

4. தோழர்களின் அன்றாட சீவனப்பாட்டுக்காக சிறுபண்ணைத் திட்டங்களை செயற்படுத்துவதெனவும் அறிவித்தது.

1984 மார்ச் 22ல் ஈரோஸ் தனது நான்காவது பிரகடனத்தை வெளியிடுகிறது.

1. ஈழவர் போராட்டத்திற்குரிய சூழல் கனிந்திருக்கும் இந்நிலையில் அப்போராட்டத்துக்கான மக்களை தயார்படுத்தி இறுதிப்போராட்டத்திற்கு இட்டுச் சென்று இம்மக்களின் விடிவாகிய ஈழத்தை நிதர்சனமாக்கும் வகையில் அகச் சூழ்நிலைகள் அமையவேண்டும் என்பதற்கிணங்க ஈரோஸ் தனது கட்டமைப்புகளை மேலும் இறுக்கமானதாகவும், மக்களை இணைத்துக்கொண்டு போராடக்கூடிய வகையில் செயற்படுவதென்றும்.

2. ஈழவர் போராட்டமானது வர்க்க குணம்சத்தை உள்ளடக்கமாகக் கொண்டிருந்த போதும் தேசிய இனப் போராட்ட வடிவமே கூர்மையடைந்துள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ளும் எமது இயக்கம் அப்போராட்ட முன்னெடுப்பில் முனைந்து செயலாற்றும்என்றும்,

ஆசிரியரும் வெளியிடுபவரும் இரா. திரவியம், 12, முதல் பிரதான சாலை, நேரு நகர், சென்னை-20

அச்சிடுபவர் : ஜே. ரமணி, பிளேஸ் பிரிண்டர்ஸ், அடையாறு, சென்னை-20.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புரட்சிக்காரன்; கொரில்லா வீரர்களின் தளபதி என்ற அளவில் மட்டுமே சேகுவாரா அறியப்பட்டுள்ளார்.

புரட்சிகரமான அரசியல் செயல்பாட்டை முன்னெடுத்துச் சென்ற சேகுவாரா கலைமனசுக்கும் சொந்தக்காரனாகவும் இருந்தான்.

'சே' கவிதையை ஒரு போதும் பிரிந்து இருந்ததில்லை.

அவன் கைப்பையில் பொலிவியன் நாட்குறிப்போடு கூடவே தனக்கு பிடித்தமான கவிதைகளைத் தொகுத்து எழுதி வைத்திருந்த நோட்டுப் புத்தகமும் எப்போதும் இருந்தது.

கலை மற்றும் வரலாற்றுத் துறைகளில் ஆழ்ந்த ஈடுபாடும், ஓவியங்களின் மீது விருப்பமும் அவனுள் கலந்திருந்தது.

புரட்சிக் காரனுக்குரிய செயல்பாடும் கலைஞனுக்குரிய மனசும் கலந்திருந்த 'சே' பற்றிய தொடர் அடுத்த இதழில் தொடரும்.



3. இன்றைய கூர்மையடைந்து வரும் நெருக்கடிகளில் எதிரியின் அசுர முன்னேற்றத்தையும் தாக்குதலையும் எதிர்கொள்ள வேண்டிய அவசியம் கருதி இன்றைய நிலையில் மற்றைய இயக்கங்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கும் இராணுவக் கூட்டணி அமைப்பதற்கும் நமது இயக்கம் தயாராய் இருப்பதுடன் தனித்துவம் பேணி ஒதுங்கி நிற்கும் இயக்கங்களை இவ் இணைப்புக்குள் கொண்டுவர முயற்சிப்பதென்றும்.

4. ஈழவர் போராட்டத்தில் எதிரியின் பக்கம் ஏகாதிபத்தியம் துணை நிற்குமென்பதை கணக்கிலெடுக்கும் எமது இயக்கம் எம்மைப் பலப்படுத்தும் திறன் கருதி நேச சக்திகளின் உதவிகளையும், வசதிகளையும் வகையாகப் பெற்று ஆயுதம் தாங்கிய மக்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கும் என்றும், அரசியல் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டது.

எமது பிரகடனமானது, ஆயுதம் தாங்கிய மக்கள் போராட்டம் மூலமாகவே ஈழம் நிதர்சனமாகும் என அறைகூவும் அதே சமயத்தில், இணைவும் போராட்டமும் (Unity and struggle) என்ற வகையில் நேச சக்திகளோடு இணைந்து இப்போராட்டம் முன்னெடுக்கப்படுமென வெளிபடுத்துகின்றது. அத்தோடு அடிப்படையில் முதலாளியம் அதன் உச்சமான ஏகாதிபத்தியத்தை வன்மையாக எதிர்க்கும் நாங்கள் நிற, இன வெறி, நவகுடியேற்றவாதம் போன்றவற்றின் பரம எதிரிகளாவோம் என்பதையும் அதே சமயம் தமது விடிவுக்காகப் போராடும் சர்வதேச புரட்சிகர விடுதலை இயக்கங்களின் ஆதரவாளர்கள் பங்காளர்களாவோம் என்பதையும் இப்பிரகடனம் மூலம் பகிரங்கப்படுத்துகின்றோம். மனிதனை மனிதன் சுரண்டும்முறை நீக்கப்படும் வழியான சோசலிசத்தின் வெற்றியே எமது வெற்றியாகும். அதுவே ஈழமாகும்.

ஈழப் புரட்சி வெல்க!

இவ்வண்ணம்
பொது ஆணைக்குழு

(இங்கே பிரகடனங்களில் இருந்து சில பகுதிகளை மட்டுமே வெளியிட்டிருக்கிறோம்)

நன்றி: ஈழம் 2.4.1984

ஈழப் போராட்டத்தின் புரட்சிகர சக்தியாய் செயற்பட்டு வரும் ஈரோஸ், ஐக்கியத்திற்கான போராட்டத்தில் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது. போராட்டத்தின் தன்மைக்கொப்ப அனைத்து சக்திகளின் இணைப்பும் பொது எதிரிக்கு எதிரான போராட்டமும் என்ற கோட்பாட்டை வலியுறுத்தி வந்துள்ளது.

இன்று ஆரோக்கியமற்ற சக்திகளால் திசை திருப்பப்படும் ஈழப் போராட்டத்தை ஒருமுகப்படுத்தி நேர் வழிப்படுத்தி கடந்தகால அர்ப்பணிப்புக்கள் வீண் போகா வண்ணம் ஈழப் போராட்டம் ஈரோஸால் முன்னெடுக்கப்படும் என 'பாலம்' நம்புகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்